வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 98 | பக்கங்கள் : 16





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


# தமிழர்கள் சமத்துவமாக வாழ்வதற்கு இந்தியாவின் அர்ப்பணிப்பு இருக்கும்!

## தமிழ் தேசிய கட்சிகளுடனான சந்திப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாக்குறுதி

கொழும்பு, ஏப்ரல் 06

**ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் சமூகத்துக்கு சமத்துவம், கௌரவம் மற்றும் நீதி ஆகியவற்றுடனான வாழ்க்கைக்கான எமது அசைக்கமுடியாத அர்ப்பணிப்பு இருக்கும் - என்று நேற்றைய தினம் தன்னை சந்தித்த தமிழ்த் தேசிய கட்சியினரிடம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடை யிலான சந்திப்பு நேற்று சனிக்கிழமை

15





## இந்திய பிரதமருக்கு 'மித்ர விபூஷண' விருது

கொழும்பு, ஏப். 06

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு "இலங்கை மித்ர விபூஷண என்ற உயரிய விருதை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்று வழங்கிக் கௌரவித்தார்.

இலங்கை - இந்திய இருதரப்பு ஒப்பந்தங்கள்

15



# தமிழரின் அபிலாசைகளை அரசாங்கம் பூர்த்தி செய்யும்

## இந்திய பிரதமர் மோடி நம்பிக்கை

- மாகாண சபை தேர்தலை அரசு நடத்தும்
- காங்கேசன்துறை துறைமுகம் நவீனமாக்கப்படும்
- திருக்கோணேஸ்வரம் ஆலய புனரமைப்புக்கு ஆதரவு
- கிழக்கு மாகாண வளர்ச்சிக்கு ரூ. 240 கோடி

கொழும்பு, ஏப். 06

"இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும். அரசமைப்பை முழுமையாக செயல்படுத்துவதற்கும் - மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்குமான அதன் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம்." - இவ்வாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி

02



## ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இலங்கை - இந்தியா கைச்சாத்து!

கொழும்பு, ஏப். 06

இலங்கை - இந்தியா இடையே பல்வேறு துறைகளில் 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நேற்று சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டன.

நேற்று சனிக்கிழமை ஜனாதிபதி பணிமனையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்திய - இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை குறிக்கும் வகையில் வலுசக்தி, டிஜிற்றல் மயமாக்கல், பாதுகாப்பு, சுகாதாரம் ஆகிய துறைகள் மற்றும் நன்கொடை உதவிகள்

15

## சர்வதேச நடைமுறைகளுக்கு இணங்கவே இலங்கை - இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம்!

### பாதுகாப்பு செயலாளர் விளக்கம்

கொழும்பு, ஏப். 06

இலங்கை - இந்தியா செய்து கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை சர்வதேச நடைமுறைகளுக்கு இணங்கவே செய்யப்பட்டது. இது இலங்கை அல்லது இந்தியாவின் உள்நாட்டு சட்டங்கள், தேசிய கொள்கைகளுடன் முரண்படாது என்று பாதுகாப்பு செயலாளர் சம்பத் துய்யகொந்த தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால பாது காப்பு உறவுகள் குறித்து அவர் வெளியிட்ட விசேட அறிக்கையி லேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில், அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

15

## படகுகளுடன் இந்திய மீனவரை உடனடியாக விடுதலை செய்க!

### இந்திய பிரதமர் மோடி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 06

இந்திய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்து அவர்களின் படகுகளுடன் திருப்பி அனுப்ப வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் இலங்கை - இந்திய இரு

15

## 3 புதிய அபிவிருத்தி திட்டங்களை மோடி, அநுர ஆரம்பித்துவைத்தனர்!

கொழும்பு, ஏப். 06

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் இணைந்து 3 அபிவிருத்தித் திட்டங்களை நேற்று ஆரம்பித்து வைத்தனர்.

சம்பூர் சூரிய மின்சக்தி திட்டத்தின் ஆரம்ப பணிகள், 5 ஆயிரம் மதத் தலங்களின் கூரைகளில்

15

## பெரும்பான்மை இனத்தவர்கள் புலிபாய்ந்தகல்லில் அத்துமீறல்

### தமிழரின் வாடிகள் அடாத்தாக அகற்றம்

முல்லைத்தீவு, ஏப். 06

புலிபாய்ந்தகல் கிராமத்தில் தமிழ் மீனவர்களின் வாடிகளை அடாத்தாக அகற்றிவிட்டு அந்த இடத்தில் தமது வாடிகளை பெரும்பான்மையின மீனவர்கள் அமைத்து வருகின்றனர் என்று அந்தப் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

15

## சந்திரிகா, மகிந்த, மைத்திரி ரணில் நாளை சந்திக்கின்றனர்?

கொழும்பு, ஏப். 06

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நாளைய தினம் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர் என்று தென்னிலங்கை

15

## 'எட்கா' உடன்படிக்கையை அரசு இறுதி செய்யவேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

கொழும்பு, ஏப். 06

அமெரிக்க சந்தை முன்னர்போல காணப்படாது. ஆடைகளை மாத்திரம் நம்பியிருக்க முடியாது. எனவே, இந்தியாவுடனான 'எட்கா'

15

## எதிர்க்கட்சி தலைவரையும் சந்தித்தார் இந்திய பிரதமர்!

கொழும்பு, ஏப். 06

இந்திய - இலங்கை நட்புறவை வலுவாக்க எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் தனிப்பட்ட அர்ப் பணிப்பும் பங்களிப்பும் பாராட்டுக்குரியவை என இந்திய பிரதமர் நரேந்திர மோடி

15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 2,800 கோடி ரூபாய் கடன் சுமை!

## ஜனாதிபதி அநுர குமார அதிர்ச்சித் தகவல்



அநுராதபுரம், ஏப். 06

நெல் களஞ்சியங்கள் அழிவடைய இடமளித்து, நெல் சந்தைப்படுத்தல் சபையானது சுமார் 2,800 கோடி ரூபாய் கடன் சுமையை கொண்டிருக்கிறது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் ஜய சிறீ மஹா போதியில் தேசிய புத்தரிசி விழா நடைபெற்றது.

மஹா சங்கத்தினரின் பிரித் பாராயணங்களுக்கு மத்தியில் தங்கப் பாத்திரத்தில் அரிசியை நிரப்பும் நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் கலந்துகொண்டார்.

விஷமில்லா விளைச்சலைப் பெறுவதற்காக மாகாண மட்டத்தில் விவசாயிகளுக்கு விதை நெல் பகிர்ந்தளிக்கும் நிகழ்விலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

பின்னர் நடைபெற்ற விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

திக்கற்றுச் சென்ற பொருளாதாரத்தையே தற்போதைய அரசாங்கம் மாற்றிக்கொண்டுள்ளது. நெல் களஞ்சியங்கள் அழிவடைய இடமளித்து, நெல் சந்தைப்படுத்தல் சபை சுமார் 2,800 கோடி ரூபாய் கடன் சுமையை கொண்டிருக்கிறது. அந்த சரிவுகளிலிருந்து மீட்டெடுத்து மறுசீரமைப்பு மற்றும் மீளமைப்புச் செய்யும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த நாட்டின் விவசாயத்துறைக்கு அமைவான அரச பொறிமுறையை போலவே ஒட்டுமொத்த விவசாய சமூகத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும், நாட்டின் கலாசார ஒழுக்கக் கட்டமைப்பையும் இணைத்துக்கொண்டு, தேசிய போருளாதாரத்தை பலப்படுத்த மீண்டும் விவசாய பொருளாதார பாரம்பரியத்தை பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

நமது முந்தைய மன்னர்கள் விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத் துறைகளுக்கு ஆற்றிய சேவையின் மூலம் மகத்துவத்தை அடைந்துள்ளதாகவும், நாட்டை உணவில் தன்னிறைவு பெறச் செய்வது மிகவும் முக்கியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிலைபேறான அபிவிருத்தி இன்று உலகளாவிய ரீதியில் பேசுபொருளாகியுள்ளது. இலங்கையின் நீர்வள நாகரிகம் நிலைபேறான அபிவிருத்திக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. சுமார் 2000 ஆண்டுகள் பழமையான இந்த நாட்டின் நீர்ப்பாசனக் கட்டமைப்பு ஏற்கனவே விவசாய வளர்ச்சிக்கு நிலையான பங்களிப்பை வழங்கி வருகிறது.

மேலும், மரபணு உரிமைகளைப் பாதுகாத்து விதைகளில் தன்னிறைவு பெற்ற நாட்டை உருவாக்க விதைப் பண்ணைகளை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரி வித்தார்.

விவசாய உற்பத்திகளுக்கு விவசாயியைப் போன்று நுகர்வோருக்கும் நியாயமான விலை தேவை என்றும் நீண்ட காலமாக சந்தை சீர்குலைவு ஏற்பட்டுள்ளதால், விவசாயி மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினருக்கும் நியாயமான விலையை வழங்க அடுத்த இரண்டு அல்லது மூன்று போகங்களில் அரசாங்கத்தின் தலையீடு மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார். (எ)



# பயன்பாடற்ற பஸ் தரிப்பிடம் நகர சபையால் அகற்றம்!

வவுனியா, ஏப். 06

வவுனியா குருமன்காடு பகுதியில் பயன்பாடற்ற நிலையிலிருந்த பேருந்து தரிப்பிடம் நகர சபையால் நேற்று அகற்றப்பட்டது.

இதனை அகற்றுமாறு நகர சபைக்கு பல்வேறு தரப்புகளிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இதனையடுத்து நேற்றைய தினம் நகர சபையால் குறித்த தரிப்பிடம் இடித்து அகற்றப்பட்டது.

இதேவேளை குறித்த பகுதிக்கு அண்மையில் தேவையான இடத்தில் புதிய பேருந்து தரிப்பிடம் ஒன்றை அமைக்கவுள்ளதாக வவுனியா நகர சபை செயலாளர் தெரிவித்தார். (எ-10)

# யாழில் ஹெரோயினுடன் மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் ஹெரோயினுடன் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் நேற்று முன்தினம் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 2 கிராம் 780 மில்லி கிராம் ஹெரோயினுடன் மூன்று சந்தேகநபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரில் இருவர் நாவற்குழி பகுதியையும், ஒருவர் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# அத்துமீறி நுழைந்து மரம் வெட்டிய இராணுவத்தினரிடம் விசாரணை?

யாழ்ப்பாணம், ஏப். 06

தனியார் காணியொன்றினுள் அத்துமீறி நுழைந்து மரம் வெட்டிய இராணுவத்தினருக்கு எதிராக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி பகுதியில் உள்ள சேமக்காலை ஒன்றினுள் இராணுவத்தினர் உட்புகுந்து வாகை மரத்தை வெட்டிய வேளை பிரதேச வாசிகள் இது குறித்து மானிப்பாய் பொலிஸார், வனவள பாதுகாப்புத் திணைக்களத்துக்கு தெரிவித்து, இது குறித்து அறிய முற்பட்ட பொழுது, வாகை மரம் வெட்ட எம்மிடம் அனுமதி பெறத் தேவையில்லை எனவும் தொடர்ந்து மரத்தை கொண்டு செல்வதற்கு தம்மிடம் அனுமதி பெற வேண்டும் எனவும் கூறினர்.

இந்த நிலையில், பொலிஸார் இராணுவத்தினரிடம் காணியினுள் மரம் வெட்டுவதற்கு உரிமையாளரிடம் பெற்ற அனுமதி கடிதத்தை தருமாறு மூன்று மணித்தியால காலம் அவகாசம் கொடுத்துள்ளனர். இதனையடுத்து, இராணுவத்தினர் குறித்த தனியார் காணி உரிமையாளரை நாட நடவடிக்கைகளை எடுத்தனர். சாதாரண பொது மகன் இவ்வாறு செயல்பட்டிருந்தால் பொலிஸார் உடனடியாக கைது செய்திருப்பர். இராணுவத்தினர் என்பதால் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காமல் கால அவகாசம் கொடுத்துள்ளனர் என்று பிரதேச வாசிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ-05)

# தேர்தல் குறித்து இதுவரை 527 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஏப். 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த 20 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் வரை 527 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகளும், சட்டத்தை மீறியமை தொடர்பில் 492 முறைப்பாடுகளும் வேறு குற்றங்கள் தொடர்பில் 29 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், நேற்று முன்தினம் மாலை 06. 00 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 71 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் ரத்நாயக்க கூறினார். (எ)

## தமிழரின்...

அநுர குமார திஸநாயக்கவுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மக்களின் தைரியத்தையும் பொறுமையையும் நான் பாராட்டுகிறேன், இன்று, இலங்கை மீண்டும் முன்னேற்றப் பாதையில் செல்வதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு தமிழ் துறவி திருவள்ளுவரின் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. அவர் கூறினார்: "செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு." - அதாவது, சவால்கள் மற்றும் எதிரிகளை எதிர்கொள்ளும் போது, ஓர் உண்மையான நண்பர் மற்றும் அவரது நட்பின் கேடயத்தை விட வலுவான உறுதி எதுவும் இல்லை.

ஜனாதிபதி திஸநாயக்க ஜனாதிபதியான பிறகு தனது முதல் வெளிநாட்டு பயணத்துக்கு இந்தியாவைத் தேர்ந்தெடுத்தார். மேலும் அவரின் முதல் வெளிநாட்டு விருந்தினராகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இது நமது சிறப்பு உறவுகளது ஆழத்தின் அடையாளமாகும்.

அயல் நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கை மற்றும் "மகாசாகர்" என்ற தொலைநோக்குப் பார்வை இரண்டிலும் இலங்கைக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு. ஜனாதிபதி திஸநாயக்கவின் இந்திய வருகைக்கு பிறகு கடந்த நான்கு மாதங்களில், நமது ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

சம்பூர் சூரிய மின் நிலையம் இலங்கை எரிசக்தி இலக்கை அடைய உதவும். பல தயாரிப்பு குழாய் அமைக்கவும், திருகோணமலையை எரிசக்தி மையமாக மேம்படுத்தவும் எட்டப்பட்ட ஒப்பந்தம் அனைத்து இலங்கையர்களுக்கும் பயனளிக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிட் இன்டர்-கனெக்டிவிட்டி ஒப்பந்தம் இலங்கை மின்சாரத்தை ஏற்று மதி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும்.

கடந்த 6 மாதங்களில் மட்டும், 10 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான மதிப்புள்ள கடன்களை மானியங்களாக மாற்றியுள்ளோம். எங்கள் இரு தரப்பு "கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம்" இலங்கை மக்களுக்கு உடனடி உதவி மற்றும் நிவாரணத்தை வழங்கும். இன்று வட்டி விகிதங்களைக் குறைக்கவும் முடிவு செய்துள்ளோம். இன்றும்கூட, இந்தியா இலங்கை மக்களுடன் நிற்கிறது என்பதை இது குறிக்கிறது.

கிழக்கு மாகாணங்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக, தோராயமாக 240 கோடி இலங்கை ரூபாய் ஆதரவு தொகுப்பு வழங்கப்படும்.

நாளை நாம் 'மாஹோ-ஓமந்தை' ரயில் பாதையைத் திறந்து வைப்போம், மேலும் 'மாஹோ - அநுராதபுரம்' பிரிவில் சமிக்ஞை அமைப்புக்கு அடிக்கல் நாட்டுவோம். காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயமாக்கும் பணிகள் விரைவில் தொடங்கும்.

நாங்கள் பகிரப்பட்ட பாதுகாப்பு நலன்களைக் கொண்டுள்ளோம் என்று நாங்கள் நம்புகிறோம். இரு நாடுகளின் பாதுகாப்பும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டது மற்றும் இணை சார்ந்தது.

இந்தியாவின் நலன்கள் மீதான அவரின் உணர்திறன் காரணமாக ஜனாதிபதி திஸநாயக்காவுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். பாதுகாப்பு ஒத்துழைப்புத் துறையில் செய்யப்பட்ட முக்கியமான ஒப்பந்தங்களை நாங்கள் வரவேற்கிறோம். கொழும்பு பாதுகாப்பு மாநாடு மற்றும் இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றிலும் நாங்கள் இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டோம்.

திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் கோயிலின் புனரமைப்புக்கு இந்தியா உதவும். அநுராதபுரம் மகாபோதி கோயில் வளாகத்தில் புனித நகரத்தின் கட்டுமானத்திலும், நுவரெலியாவில் சீதா எலிய கோயிலின் கட்டுமானத்திலும் இந்தியா ஆதரவளிக்கும்.

இலங்கையில் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் குறித்தும் நாங்கள் பேசினோம். ஜனாதிபதி திஸநாயக்க அவரின் உள்ளடக்கிய அணுகுமுறையை எனக்கு மதிப்பிட்டார். இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் என்றும் இலங்கையின் அரசமைப்பை முழுமையாக செயல்படுத்துவதற்கும், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் அதன் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் காயம்

காலி, ஏப். 06

எல்பிட்டிய - உரகஸ் மன்ஹந்திய பகுதியில் நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர், பெலி கஸ்வெல்ல பகுதியைச் சேர்ந்த 56 வயதுடையவர் ஆவார்.

உரகஸ்மன்ஹந்திய பகு திக்கு ஓட்டோவில் சென்ற இனந்தெரியாத குழுவின ரால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் எல்பிட் டிய ஆதார மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு, மேல திக சிகிச்சைக்காக கரா பிட்டிய போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள் ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உரகஸ்மன்ஹந்திய பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர். (எ)



## எமது எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஏப். 06

"நாமாகவே புதிய வாய்ப்புகளைத் திறந்தும் நமது ஏற்றுமதியைப் பாதுகாக்கும் அதேவேளையில் நமது எதிர்காலத்தைப் பாதுகாப்ப தற்குத் தேவையானதையும் செய்யவேண்டும்"- இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை ஒன்றிணைந்த ஆடை சங்கங்கள் மன்ற பிரதி நிதிகள் நேற்று எதிர்க்கட்சித் தலைவரை அவரது அலுவலகத் தில் சந்தித்து கலந்துரையாடி னர். இதன்போதே மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "அர சியல் சாராத ஒன்றுகூடலாக அமைந்த இவ்வமர்வு, ஆடைத் தொழில்துறையுடன் சம்பந்தப் பட்ட 3 இலட்சத்து 50,000 இற் கும் மேற்பட்ட நேரடி வேலை வாய்ப்புகள் மற்றும் ஒரு மில்லி யனுக்கும் அதிகமான இலங்கை யர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற அவசர இலக்கை அடைவதை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்தது"- என்றார். (எ)

## கஜமுத்துக்களுடன் இளைஞன் கைது!

கம்பஹா, ஏப். 06

கம்பஹா - திவுலப்பிட்டி நகரத்தில் இரண்டு கஜமுத்துக்க ளுடன் இளைஞன் ஒருவர் திவுலபிட்டிய பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் கைது செய் யப்பட்டுள்ளார்.

திவுலபிட்டிய பொலிஸாருக் குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய இளை ஞனே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இரண்டு கஜ முத்துக்களையும் 15 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யத் தயாராக இருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள் ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## சிகிச்சைக்கு வந்த பெண்ணுக்கு மருத்துவர் பாலியல் துன்புறுத்தல்

கொழும்பு, ஏப். 06

நீர்கொழும்பு மாவட்ட பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெறுவதற்காக வந்த இளம் பெண்ணொருவர், அங் குள்ள மருத்துவரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டதாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

இவ்வாறு, குற்றஞ்சுமத் தப்பட்ட மருத்துவர் தமது சங்கத்தின் உறுப்பினராக இருந்து நீக்கப்பட்டவர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு, உடனடியாக சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு, குற்றவாளி மீது கடு மையான நடவடிக்கைகள் எடுக் கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ)

## நானு ஓயாவில் ரயில் தடம் புரள்வு

நானுஓயா, ஏப். 06

நானுஓயாவிலிருந்து பதுளை நோக்கிப் பயணிக்க விருந்த எல்ல ஒடிஸி ரயில் நானு ஓயாவில் நேற்றுச் சனிக் கிழமை தடம்புரண்டுள் ளது.

இந்த ரயில் நேற்றுக் காலை 08 : 10 மணிக்கு நானுஓயாவிலிருந்து பதுளை நோக்கிப் பய ணிக்கவிருந்த நிலையில் நானு ஓயா ரயில் நிலை யத்துக்கு அருகாமையில் தடம்புரண்டுள்ளது.

இந்த ரயிலில் பதுளை நோக்கிப் பயணம் மேற்கொள் வதற்காக வருகை தந்திருந்த பய ணிகள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். (எ)





## வரவேற்புக்கு மழை கூட தடையாக இருக்கவில்லை

### இந்திய பிரதமர் மோடி நெகிழ்ச்சி

கொழும்பு, ஏப். 06

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியப் பிரத மர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இலங்கையை வந்தடைந் தார்.

இந்த நிலையில், கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு வந்த பிரதமர் மோடிக்கு கொழும்பில் உள்ள இந்திய சமூ கத்தினர் பெரும் வரவேற்ப ளித்தனர்.


இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத் தில் குறிப்பிட்டுள்ள பிரதமர் மோடி,

"கொழும்பிலுள்ள இந்திய சமூகத்தினர் எனக்கு வழங்கிய ரம்மியமான வரவேற்புக்கு மழை கூட தடையாக இருக்க வில்லை. அவர்களது அன்பான அரவணைப்பு மற்றும் உற்சா கத்தினால் நான் மிகுந்த நெகிழ்ச்சி அடைந்தேன். அவர் களுக்கு எனது நன்றி!" என்று தமிழில் குறிப்பிட்டுள் ளார்.

அத்துடன் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் பொம்மலாட் டத்தை பார்வையிட்ட இந்தி யப் பிரதமர் மோடி அது குறித்து அவரது எக்ஸ் தளத் தில்,

"சுந்தர காண்டத்தின் சில பகுதிகளை பிரதி பலித்த பொம்மலாட்டத்தை இங்கு காண முடிந்தது. நளின் கம் வாரி மற்றும் சிறி அநுர பொம் மலாட்ட கழகத்தினருக்கு அவர்களது ஆர்வம் மற்றும் ஆற்றலுக்காக எனது பாராட் டுகள்" எனக் குறிப்பிட்டுள் ளார். (எ)

## ஓட்டமாவடியில் திடீரென தீப்பற்றிய மோ. சைக்கிள்



மட்டக்களப்பு, ஏப். 06

ஓட்டமாவடி - தியாவட் டவான் பிரதேசத்தில் நேற்றுச் சனிக்கிழமை மோட்டார் சைக் கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது.

ஓட்டமாவடி - மீராகே வாடை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்குச் சொந்த மான மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீப்பற்றியது.

இந்த இளைஞன் மாத்தளை நோக்கிப் பயணிப்பதற்காக தியாவட்டவான் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற் றோல் நிரப்பும் போதே குறித்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீயை அணைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட போதும் அது பலன ளிக்கவில்லை.

இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (எ)

## மாடுகளை திருடிய இருவர் பொலிஸாரால் கைது!

பெரிய நீலாவணை, ஏப். 06

வீடுடைப்பு மற்றும் மாடுகள் திருட்டு, வர்த்தக நிலையங்களில் சூட்சுமமாக களவாடி வந்த குழு வின் இரு சந்தேக நபர்களை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை - பாண் டிருப்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் வீடுகள் உடைக்கப்பட்டும் மாடுகள் மற்றும் பெறுமதி யான பல பொருட்கள் திருடப்பட்டும் வந்தன.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை குறித்த கொள்ளைக் குழுவில் உள்ள 2 சந்தேக நபர்கள் சி.சி.ரிவி காணொலி மற்றும் பொதுமக்களின் தகவல்களின் அடிப்படையிலும் பெரிய நீலா வணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பதுடன் சுமார் 25 வயது முதல் 28 வயது மதிக்கத்தக்கவர்களாவர். ஏனைய கொள்ளைச் குழுவில் உள்ள மூவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பெரிய நீலாவணை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட கொள்ளையர் குழு சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து திருடி செல்லப் பட்ட எரிவாயு சிலிண்டர்கள் 5இற்கும் அதிகமா னவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பல பொருட்களும் மீட்கப்பட்டு பொலிஸ் நிலை யத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

குறித்த நடவடிக்கையானது கல்முனை பிராந் திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அசார் வழிநடத்தலில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தலை மையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை பகைத்தால் உக்ரைனை விட மோசமான நிலை இலங்கைக்கு ஏற்படும்!

## முன்னாள் அமைச்சர் ராஜித எச்சரிக்கை



களுத்துறை, ஏப். 06

**அதானியின் ஒரு பில்லியன் டொலர் முதலீட்டை இழந்தமை அநுர அரசாங்கம் இழைத்த பெரும் தவறாகும். நட்பு நாடான இந்தியாவைப் பகைத்துக் கொண்டால் உக்ரைனை விட மோசமான நிலைமையே இலங்கைக்கு ஏற்படும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எச்சரித்துள்ளார்.**

களுத்துறையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அரசாங்கம் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக ஒவ்வொருவராகக் கைது செய்து கொண்டிருக்கிறது.

கோடிக்கணக்கில் கொள்ளையடித்தவர்களை விடுத்து, சில்லறை மோசடியாளர்களையே கைது செய்கின்றனர். தற்போது, கைது செய்யப்படும் அனைவரும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு, தடுத்து வைக்கப்படுவது முக்கியமல்ல. உரிய சாட்சிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக பெரும்பாலான வழக்குகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சாமர சம்பத் தஸநாயக்கவை சிறையிலடைப்போம் எனக்கூறி, இரு தினங்களில் அவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு சட்ட நடவடிக்கைகள் அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படும் எனில் அவை அங்கீகரிக்கக் கூடிய வையல்ல. எதிராளிகளை அரசியல் ரீதியில் கைது செய்யும் கலாசாரம் ஆரம்பிக்கப்பட்டால் அது எதிர்காலத்திலும் தொடரும்.

ஆனால், எமது ஆட்சியில் இவ்வாறு எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இந்த அரசாங்கமே தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்கப் போவதில்லை என்பதையும் இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு, கடன் மீளச் செலுத்தல், ட்ரம்ப்பின் வரிக் கொள்கை என பாரதூரமான பிரச்சினைகள் முன்னிருக்கும் போது அரசாங்கம் இவற்றில் ஆர்வமாக இருப்பது நாட்டின் எதிர்காலத்துக்கு ஆபத்தாகும்.

அதானி நிறுவனத்தின் ஒரு பில்லியன் டொலர் முதலீட்டை இழந்துவிட்டு எவ்வாறு இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்? உக்ரைன், ரஷ்யாவுடன் மோதி இன்று படு பாதாளத்தில் வீழ்ந்துள்ளது.

அதேபோன்று தான் இந்தியாவுடன் மோதினால் இலங்கையும் அழிவுப் பாதையில் செல்லும். நட்பு நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை எவ்வாறு பேணுவது என்பதற்கு அனுபவம் தேவை. அது இந்த அரசாங்கத்துக்கு இல்லை" - என்றார்.

(எ)



# இத்தாலி தூதுவர் - சஜித் சந்திப்பு

கொழும்பு, ஏப். 06

இலங்கைக்கான இத்தாலி தூதுவர் டெமியானோ பிரான் கோவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை - இத்தாலி மற்றும் ஐரோப்பா குறித்து ஒரு நாடாக நாம் மேலும் பல அம்சங்கள் தொடர்பில் ஆராய வேண்டும் என்பது இங்கு உணரப்பட்டது. ஏனெனில், அந்த நாடுகளில் இன்னும் பயன்படுத்தாத சாத்தியமான பரப்புகளும் புதிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன. எமது தொழில்துறைகள் மூலம் பெறுமானங்களை கட்டியெழுப்பிக் கொண்டால், உலகம் எங்களுக்கு ஆதரவளிக்கத் தயாராகவுள்ளது என்பது தெளிவாகத் தெரிந்தது. அரசியலுக்கு அப்பாலும் நமது பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்தல் முன்னுரிமையளிக்கப்பட வேண்டியதோர் தேசிய பணியாகும். இதற்கு ஒற்றுமையும், தொலைநோக்குப் பார்வையும், அறிவார்ந்த, நட்பு ரீதியானதுமான கூட்டாண்மைகளும் ஒரு நாடாக எமக்குத் தேவையாக காணப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# அமெரிக்க வரி விடயத்தில் அநுர அரசுக்கு ஒத்துழைப்பு

## ஹர்ஷ டி சில்வா அறிவிப்பு



கொழும்பு, ஏப். 06

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த பரஸ்பர வரிகளின் பின்னணியில், ஏற்றுமதியாளர்களுக்கு அரசாங்கம் அவசர நிவாரணம் வழங்க வேண்டும். இந்த நெருக்கடி தேசிய ரீதியானது. இதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் மிகப்பெரியதாக இருக்கலாமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

வரி விதிப்பால் ஏற்பட்ட நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அநுர அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை அவசர நிவாரண நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். ஏற்றுமதியாளர்களுக்கான எளிமைப்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட வரி நீக்கத்தில் அடுத்த வாரம் திட்டமிடப்பட்ட திருத்தத்தை நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

அமெரிக்க வரி அதிகரிப்பால் அதிகரித்து வரும் உலகளாவிய வர்த்தக பதற்றங்களுக்கு மத்தியில் ஏற்றுமதியாளர்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படாவிட்டால் கடுமையான விளைவுகள் ஏற்படும். இந்த நெருக்கடி தேசிய ரீதியானது. இதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் மிகப்பெரியதாக இருக்கலாம்.

பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்குத் திரும்புவதற்குப் பதிலாக இலங்கை கட்டணச் சுவர்களை உடைத்து வர்த்தகப் பாலங்களைக் கட்ட வேண்டும்.

இலங்கை பெரிய வர்த்தக மற்றும் முதலீட்டு சீர்திருத்தங்களை மேற்கொள்ளாவிட்டால், பிராந்தியத்துடனான ஒருங்கிணைப்பு எட்ட முடியாததாகவே இருக்கும் என்று பிம்ஸ்டெக் மாநாட்டிலும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகளில் தாராளமயமாக்கலுக்கு நாம் உறுதியளிக்காவிட்டால் பிராந்திய விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் ஒரு கனவாகவே இருக்கும்.- என்றார்.

# இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை அமுலாக்க இடமளிக்க மாட்டோம்

## முன்னிலை சோசலிச கட்சி எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 06

இந்தியாவுடன் அரசாங்கம் செய்துள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் பாராளுமன்றத்துக்கும், அமைச்சரவைக்கும் தெரியாது, மக்களுக்கு அறிவுறுத்தாமல் திருட்டுத்தனமாக கைச்சாத்திடப்பட்டால் அதன் ஓர் உறுப்புரையையேனும் செயல்படுத்துவதற்கு இடமளிக்கப் போவதில்லை. அதற்கு எதிராக மக்களை அணி திரட்டுவோமென முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்து முன்னிலை சோசலிச கட்சி ஜனாதிபதி செயலகத்துக்கு மகஜர் ஒன்றை நேற்று முன் தினம் கையளித்தது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் முடிவுகளை எடுக்கும்போது, குறிப்பாக பல தலைமுறையினரை பாதிக்கும் முடிவுகளை எடுக்கும்போது மக்களிடம் கேட்க வேண்டும். இவ்வாறான ஒப்பந்தங்கள் தொடர்பில் சமூகமட்ட கருத்தாடல்கள் மேற்கொண்டு மக்கள் அபிப்பிராயத்துடன் அனுமதித்துக்கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் ஒப்பந்தத்தின் பிரதியை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து விவாதிக்க வேண்டும். அவ்வாறு எதுவும் இல்லை. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அந்த ஒப்பந்தத்தை பார்க்கக்கூட கேட்பதில்லை.




ஐக்கிய மக்கள் சக்தி, மொட்டு கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன இந்தியாவுக்கு எதிராக வாய் திறப்பதில்லை. பாராளுமன்றத்துக்குள் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்தே மக்கள் விரோத செயலை மேற்கொள்கின்றன- என்றார். (எ)

# பொலிஸுக்கு எதிராக விசாரணை சுயாதீன ஆணைக்குழு அவசியம்

கொழும்பு, ஏப். 06

பொலிஸாருக்கு எதிராக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்ய சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்படுவதுடன், மனித உரிமை பாதுகாப்புக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதும் அவசியம் என்று பொதுமக்களின் அரசமைப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை சட்சர நிமேஸ் என்ற இளைஞன் உட்பட சிலர் உயிரிழந்தனர்.

இது தொடர்பில் பொது மக்களின் அரசமைப்பு சபை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட விசேட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொலிஸ் காவலில் நிகழும் மரணங்கள் இலங்கைக்கான புதிய அரசமைப்புச் சட்டத்தின் தேவையை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு தனிநபருக்கும் வாழ உரிமை உண்டு. இது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாக கருதப்படுவதுடன், அனைத்து சூழ்நிலைகளிலும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இருப்பினும், பதிவாகும் இவ்வாறான அவலங்கள் நாட்டில் அடிப்படை மனித உரிமைகள் கடுமையாக மீறப்படுவதை சுட்டிக்காட்டும் வகையில் உள்ளன. 'வாழ்வுரிமை' கூட இலங்கை அரசமைப்பால் அங்கீகரிக்கப்படவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது.

பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் காவலில் இருப்பவர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொலிஸ் சீர்திருத்த செயன்முறையை துரிதப்படுத்துவதுடன், புதிய அரசமைப்பை உருவாக்கும் செயன் முறையை ஆரம்பிப்பதும் காலத்தின் தேவை என்பதை அதிகாரிகள் உணர வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.04.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், பங்குனி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலில் மாற்றங்கள்

ஜே. வி. பி. ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்புக்குப் பிரபலமான ஓர் அரசியல் இயக்கம். அவ்வாறானதோர் அரசியல் பாசறையில் உரு வாகிய அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம், பாரத பிரதமருக்கு இலங்கையின் மித்திர விபூஷண என்னும் விருதை வழங்கி ஆரத்தழுவுகின்றது. இந்த நிலைமையும் மாறலாம் அல்லது அப்படியே தொடரலாம். ஏனெனில், அரசியலில் அனைத்துக்கும் இட முண்டு. ஆனால், தங்களின் நிதானத்தினதும் தூரநோக்குமிக்க அணுகுமுறையினதும் அளவுதான் தங்களின் ஆட்சியின் அளவு என்பதை ஜே. வி. பி. புரிந்திருக்கின்றது.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை நிரந்தர எதிரிகளும் இல்லை என்னும் ஒரு கூற்றுண்டு. அப்படியாயின், எதுதான் நிரந்தர மானது? அரசியலில் நலன்கள் மட்டுமே நிரந்தரமானது. அந்த நலன் களுக்கு எது உகந்ததோ அவ்வாறான முடிவுகளை எடுப்பதன் ஊடாக மட்டும்தான் அரசியல் பரீட்சையில் எல்லாக் காலத்திலும் வெற்றி பெற முடியும். இந்தச் சூத்திரத்தை இன்றைய ஜே. வி. பி. புரிந்து கொள்ள முயற்சிக்கிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மித்திர விபூஷண என்று விருது வழங்கிய நேற்றை தினம், ஜே. வி. பியின் வரலாற்றில் முக்கிய மானது. 1971 ஏப்ரல் 5ஆம் திகதிதான் ஜே. வி. பி. அதன் முதலாவது ஆயுதக் கிளர்ச்சியை மேற்கொண்ட நாள். அதிகாரம் என்பது துப்பாக் கிக்குழலிலிருந்து பிறக்கிறது என்னும் மாவோயிச அணுகுமுறையில் இலங்கையின் ஆட்சியை, புரட்சியின மூலம் கைப்பற்ற முற்பட்டு - மோசமாகத் தோற்கடிக்கப்பட்டது. அன்றைய தினத்தில் இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்பாட்டை இன்று மேற்கொண்டிருக்கிறது.


ஜே. வி. பி .தொடர்பில் எண்ணிப்பார்க்கும் போது, அதற்கு ஒப் பான ஆனால், அதனை விடவும் மகத்தான ஆயுதப் போராட்ட வர லாற்றை ஈழத் தமிழினம் கொண்டிருக்கிறது. ஒருகாலத்தில் ஆயு தங்கள் மூலம் அதிகாரத்தை அடையலாம் என்று நம்பியதில் தவ றில்லை - உலகின் பல பாகங்களிலும் அவ்வாறு நடந்திருக்கின் றன. ஆனால், அயுதப் போராட்டம் ஒரு பெரும் அழிவை வழங்கிய பின்னர், அதிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்பவர்கள் வரலாற்றில் முன்னோக்கி நடக்கின்றனர். அப்படித்தான் இன்று ஜே. வி. பி. அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது. ஆனால், தமிழ்ச் சூழலை உற்று நோக்கினால் தொடர்ந்தும் சறுக்கி விழுந்து கொண்டிருப்பதே வரலாறாகத் தொடர்கின்றது - ஏன்?

அரசியலை மாற்றங்களுக்குள்ளால் நோக்காமலும் அந்த மாற்றங்கள் முதன்மைப்படுத்துகின்ற யாதார்த்தங்களை பற்றிக் கொள்ளாமலும் - வெறும் விருப்பங்கள் பற்றியே பேசிக் கொண்டி ருப்பதால்தான் தமிழர் அரசியல் தொடர்ந்தும் கையறு நிலையிலேயே இருக்கின்றது.

ஈழத் தமிழர் பற்றி பல ஆடம்பரமான வார்த்தைகள் உண்டு. ஈழத் தமிழர் ஒரு படித்த சமூகம். ஆனால், சிங்களவர்களோ மோடர் கள். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எட்டுக் கோடி தமிழ்நாட்டு மக்கள் இருக்கின்றனர். ஈழத் தமிழர்களுக்கு பலமான புலம்பெயர் சமூகம் உண்டு. இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கும் போதுதானே மறுபுறம் ஈழத்தமிழர் அனைத்தையும் இழந்திருக்கின்றனர். இனி யும் இவைகள் பற்றி பெருமை பேசுவதில் ஏதாவது, பொருள் இருக்க முடியுமா?

நேற்று எவையெல்லாம் ஈழத் தமிழர்களுக்குக் கை கொடுக்க வில்லலயோ - அவைகள் இனியும் கைகொடுக்காது. இதனை புரிந்து கொள்வதுதான் அரசியலில் முன்னகர்வதற்கான முதல்படியாகும். எது இருக்கிறதோ, அதுதான் ஈழத் தமிழர் அரசியலில் பயணம் செய்வ தற்கான வாகனம். அந்த வாகனத்தை சரியான திசை நோக்கி ஓட்டிச் செல்லும் அரசியல் தலைவர்கள் இருந்தால் அதுதான் ஈழத் தமிழர் களுக்கான வரம்.

# இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு சுதந்திர சதுக்கத்தில் சிறப்பு வரவேற்பு



கொழும்பு, ஏப். 06

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அரச பய ணமாக இலங்கை வந்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்று சனிக்கிழமை நடை பெற்றது.


இந்திய பிரதமர் நரேந் திர மோடி, குதிரைப் படையை முன்னிலையாகக் கொண்டு சுதந்திர சதுக்க வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் இந்திய பிர தமருக்கு சிறப்பு வரவேற் பளிக்கப்பட்டது.

இதனையடுத்து இரு நாடுகளினதும் தேசிய கீதங் கள் இசைக்கப்பட்டன. பின் னர் இந்திய பிரதமர் நரேந் திர மோடியை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பமானது. இதன் போது கௌரவ வேட்டுக் கள் தீர்க்கப்பட்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. தொடர்ந்து, இந்திய பிரத மர் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்திய பிரதமர் நரேந் திர மோடி மற்றும் ஜனாதி பதி அநுர குமார திஸ நாயக்க ஆகியோர் பிரமுகர் களுக்கான கௌரவத்தை ஏற்றுக்கொண்டமையைத் தொடர்ந்து இருநாட்டுத் தலைவர்களும் இரு தரப்பு பிரதிநிதிகளை அறிமுகப் படுத்தினர்.

இந்திய பிரதமர் நரேந் திர மோடியை வரவேற்கும் அரச நிகழ்வில், பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபா நாயகர் ஜகத் விக்கிரமரத்ன, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்ச ரும் பொருளாதார அபிவி ருத்தி பிரதியமைச்சருமான அனில் ஜயந்த பெர் னாண்டோ, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி யாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந் துன்நெத்தி,சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜய திஸ்ஸ, மீன்பிடி, நீரியல் மற் றும் கடல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் ஆகியோரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தேசிய பாது காப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளியுறவு செய லாளர் விக்ரம் மிஸ்ரி, இலங் கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் சந்தோஷ் ஜா உட் பட இரு நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவும் கலந்து கொண்டனர். (ஐ)

# லலீசன், சிவகுமாரனுக்கு தமிழக ஆளுநரால் விருது





சென்னை, ஏப். 06

இலங்கையின் தமிழறி ஞர்களான ச. லலீசன், த. சிவகுமாரன் ஆகியோருக்கு தமிழக ஆளுநர் ஆர். என். ரவி விருது வழங்கி கௌரவ மளித்துள்ளார்.

தமிழ் இலக்கிய விருது வழங்கும் விழா நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சென்னையிலுள்ள ஆளுநர் மாளிகை ராஜ்பவ னில் நடைபெற்றது.

தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் இலங்கையின் தமிழறிஞர் களான வவுனியா தமிழ் சங்க அமைப்பாளர் தமிழருவி த. சிவகுமாரன், யாழ்ப்பாண தமிழ்ச் சங்க பொதுச் செய லாளரும் கோப்பாய் ஆசிரி யர் கலாசாலை முதல்வரு மான செந்தமிழ்ச் சொல்ல ருவி சந்திரமௌலீசன் லலீ சன் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட னர். (ஐ)


# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவின் திறவுகோல்!

வெ. இன்சுவை



என் உறவினர் கண் மருத்துவர். அவரைப் பார்க்கச் சென்றிருந்தபோது, அவர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்ததால், நான் ஓர் அறையில் காத்திருந்தேன். அந்த அறையில் ஓர் உதவியாளர் கண் பரிசோதனை செய்து கொண்டிருந்தார். பலரும் முதல் நான்கு வரிசை எழுத்துகளை எளிதாகப் படித்துவிட்டார்கள். கடைசி இரண்டு வரிசை எழுத்துகளைப் படிக்க கண்ணாடிகளைப் பொருத்தி, பின் படிக்கச் சொன்னார்கள். இது நன்றாகத் தெரிகிறதா? என்று கேட்டுக் கேட்டு, கண்ணாடிகளை மாற்றி மாற்றிப் பொருத்தி, படிக்கச் சொன்னார்கள். அந்த மனிதர் நன்றாகத் தெரிகிறது என்று சொன்னார். இதில் இரு சாராருமே களைத்துப் போய் விடுகிறார்கள். வேறு எந்த சிகிச்சைக்குப் போனாலும், மருத்துவர்கள் நம்மைக் கேட்டு சிகிச்சை செய்யமாட்டார்கள். நோயின் தன்மைக்கேற்ப மருத்துவர்கள் சிகிச்சை அளித்து விடுவார்கள். கண் பரிசோதனை போல இங்கு நம் முடிவு தேவை இல்லை.

எதையுமே நம் விருப்பத்துக்கு விட்டுவிட்டால், நாம் முடிவெடுப்பதில் குழப்பம் அடைகிறோம். நிறையத் தயங்குவோம் யோசிப்போம். ஒரு புடவை அல்லது நகை வாங்க எவ்வளவு நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள்! ஒரு கடையையே புரட்டிப் போட்டுவிடுகிறார்கள். அப்போதும் திருப்தி ஏற்படுவதில்லை. ஒரு புடவை, நம் வாழ்நாள் முழுவதும் கிழிந்து போகாமல் இருக்குமா? அதை வருடத்துக்குப் பத்து முறை உடுத்துவார்களா? இவர்கள் நூற்றுக்கணக்கான புடவைகளை நிராகரிப்பார்கள். இன்னொரு பெண் கையில் வைத்துள்ள புடவையின் மீது கண் போகும். உடனே அது பிடித்துப் போய்விடும். அதைக் கொடுக்கும்படிக் கேட்பார்கள். அவ்வளவு நேரமும் அந்தப் புடவையை எடுக்கலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்த அந்தப் பெண், சட்டென்று, தான் அதை எடுத்துக் கொண்டதாகக் கூறிவிடுவார். இவர் ஏமாற்றம் அடைந்துவிடுவார். புடவைக்கே இந்த நிலை என்றால், நகைக்கு எப்படி இருக்கும்?

ஒவ்வொன்றையும் அணிந்து, கண்ணாடியில் பார்த்து, பின் வேறு வடிவமைப்பு வேண்டும் என்று கேட்பது; எதையும் வாங்காமல் பொழுதைப் போக்கிவிட்டு, குளிர்பானம் குடித்து, பின் எழுந்து போய்விடுவது - பாவம், அந்த விற்பனையாளர்கள். இரண்டு கிராம் நகைக்கே அத்தனை தேடல் இருக்கும்.

அதேசமயம், யாராவது பரிசாக ஒரு புடவை கொடுத்தால், புடவையின் நிறம், தரம் என எதையும் குறை சொல்லாமல் பெற்றுக் கொள்கிறார்கள். கொடுப்பவர்கள் நிறையப் புடவைகளைக் காட்டி, அவற்றுள் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள்ளச் சொன்னால் மீண்டும் புரட்டுதல், ஒதுக்குதல் நடக்கும்.

உணவகத்துக்குப் போனால் என்ன சாப்பிடுவது என்று முடிவெடுக்க நிறைய நேரம் எடுத்துக் கொள்கிறார்கள். தட்டில் உணவு வந்த பின், பக்கத்து மேசையில் உள்ளதைப் பார்த்து, 'அடடா! அதை சொல்லியிருக்கலாமோ?' என நினைக்கிறார்கள். வயிறு நிறைந்துவிட்டால் அமிழ்தமே ஆனாலும் மறுத்து விடுகிறோம். அதற்கெதற்கு இவ்வளவு தீவிர திட்டமிடல்!

ஒவ்வொரு விஷயத்திலும் சட்டென முடிவெடுக்க முடியாமல் குழம்பித் தவிக்கிறோம். வீடு கட்டத் தொடங்கும் முன்பே எவ்வளவு யோசனைகள், ஆலோசனைகள், திட்டமிடல். நம் ஒவ்வொருவருக்கும் வீடு குறித்த கனவுகளும், கற்பனைகளும் நிறைய இருக்கும். அதனால் உத்தேசித்த தொகையைக் காட்டிலும் கூடுதலாக செலவை இழுத்துவிட்டுக் கொள்கிறார்கள். யானை அசைந்து தின்னும், வீடு அசையாமல் தின்னும் என்பார்கள். அதிலும் முக்கியமாக எந்த வர்ணம் அடிப்பது என்று முடிவு செய்வதற்குள் விழிபிதுங்கிப் போய்விடும்.

உணவகம் போவதற்காகட்டும், மருத்துவமனை போவதற்காகட்டும் அவை குறித்த மதிப்புரைகளை இணையத்தில் பார்த்த பின்னரே போகிறார்கள். பிள்ளையை எந்தப் பள்ளியில் சேர்க்கலாம்? எந்தக் கல்லூரியில் சேர்க்கலாம்? எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கலாம்? என்று நிறைய யோசித்து, பலரிடம் ஆலோசனை கேட்டு, இறுதியில் அவர்கள் விருப்பத்துக்கு முதலிடம் கொடுப்பார்கள். ஒரு காலணி அல்லது ஒரு கைப்பையைக்கூட எளிதில் வாங்குவதில்லை.

இரு சக்கர வாகனம் மற்றும் கார் வாங்க வேண்டுமென்றால் ஆயிரம் ஆராய்ச்சிகள். எல்லோரும் வியந்து பாராட்ட வேண்டும் தம் செல்வச்செழிப்பின் அடையாளமாக அது இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். தரமான பொருளைத் தேடி, பல கடைகளில் விலையை ஒப்பிட்டுப் பார்த்து வாங்குகிறார்கள். பொருளின் தரம், விலை, ஆயுள், பயன்பாடு ஆகியவற்றைக் கவனிக்கிறார்கள். பொருள்களின் விவரங்கள், தயாரிப்பு, உத்தரவாதம் இவற்றோடு பொருளில் ஏதேனும் பழுது இருக்கிறதா? என்றும் பார்க்கிறார்கள்.

முதலில் திருமண விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம். அனைவருக்கும் தங்கள் வாரிசுகளுக்கு, சிறந்த வாழ்க்கைத் துணை அமைய வேண்டும் என்பதுதான் ஆசை. ஆனால், சதுரங்க ஆட்டத்தில் காய் நகர்த்துவதுபோல கவனத்துடன் இருந்தாலும் கோட்டை விட்டுவிடுகிறார்கள். பெண்ணுக்கு வரன் தேடும்போது, மணமகனின் தோற்றம், குடும்பப் பின்னணி, வேலை, ஊதியம், வசதி என அனைத்தும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று தேடி அலைகிறார்கள். ஜாதகப் பொருத்தம் இல்லையென்றால், ஒப்புக் கொள்வதில்லை.

அதேசமயம் வெளித் தோற்றத்தையும், பகட்டையும் பார்த்து ஏமாந்து போய்விடுகிறார்கள். மணமகனின் குணம் எப்படிப்பட்டது என விசாரிப்பதில்லை. அப்படியே விசாரித்தாலும், அக்கம் பக்கத்தினரோ, மணமகனுடன் பணிபுரிபவர்களோ, சுற்றமோ உண்மையைக் கூறாமல் மறைத்து விடுகிறார்கள்.

(14ம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 06.04.2025 - 13.04.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 23
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள் ளம் மகிழும். பிராயணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். விற்பனைப் பிரதிநிதிக ளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகளை கையாண்டு வெற்றி அடைவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பிரயாணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். உங்களுக்குத் தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடி வரும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். உங்களுக்குத் தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பா ராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடி வரும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாரம் தாய்வழி உறவுகள் உதவி செய்வார்கள். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புக்கள் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் இனிய பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவு கள் ஏற்படும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூல பலன்கள் உண்டு. உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். சுறுசுறுப்பாக பணிகளை ஆற்றி நல்ல பெயர் எடுப்பீர்கள். புனித யாத்திரைகளின் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்கள் புதிய வேலைவாய்ப்புக்காக பல இடங்களுக்கு அலைந்து திரிய நேரிடும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கை யாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். மகிழ்ச்சி பெருகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங் கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்ப டும். ஓரளவு பணவரவு இருக்கும். சினத்தை அடக்கினால் சிரமங் கள் குறையும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு பண முடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் ஆதாயம் அதிகரிக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சில நேரங்களில் நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங் கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சத்தீவு மீட்பு: தீர்மானங்கள் தீர்வாகாது!

கச்சத்தீவை மீட்பது குறித்தான விவகாரத்தில் என்ன நடந்தது? தற்போது என்ன நடக்கிறது? இந்தியா - இலங்கை ஒப்பந்தம் கையொப்பமான போது மறைந்த முதல்வர் மு.கருணாநிதி என்ன செய்தார்? கச்சத்தீவை மீட்பது தொடர்பாக இந்தியா - இலங்கை இரு நாடுகளிடையேயான ஒப்பந்த ஷரத்துகள் என்ன தெரிவித்திருக்கின்றன? ஆக, இனி கச்சத்தீவை மீட்க இந்திய அரசு முனைந்தால், அது நிறைவேறுமா என்கிற கேள்விகள் எழுகின்றன.

கச்சத்தீவு யாருக்குச் சொந்தம் என்கிற கேள்வி இன்று நேற்றல்ல, சற்றேறக்குறைய 1920-களில் இருந்து தொடர்கதையாகி வருகிறது. பாக் நீரிணை - மன்னார் வளைகுடா பகுதிகளில் எல்லையை வரையறுப்பதற்காக 1921 அக்டோபர் 24-ஆம் தேதி கொழும்பு நகரில் சென்னை மாகாண அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இலங்கை சார்பாக கலந்துகொண்ட சுங்க வரிக்கான முதன்மை கலெக்டர் ஹார்ஸ்பர்க், 'கச்சத்தீவு இலங்கைக்கு வரும்படி எல்லையை வகுக்க வேண்டும். இல்லாவிட்டால் மாநாட்டை நிறுத்திவிடலாம்' என்ற கருத்தை முன்வைத்தார்.

இதை ஏற்காத இந்தியக் குழு, வேண்டுமானால் அந்தப் பகுதியின் மீன்பிடி உரிமையை மட்டும் தருவதாகச் சொன்னது. ஒப்பந்தமும் கையெழுத்தானது. ஆனால், இந்த ஒப்பந்தத்தை காலனி அலுவலகம் ஏற்கவில்லை. ஆகவே, சட்ட ரீதியாக இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கே வரவில்லை.

ஆனால், தற்போது கச்சத்தீவு இலங்கை வசம் உள்ளதாகவும், அதை மீட்க வேண்டும் என இந்தியாவில் மத்திய, மாநில அரசுகள் முயற்சி செய்து வருவதையும்








நாம் பார்த்து வருகிறோம். இந்திய சுதந்திரத்துக்குப் பிறகும் இந்தப் பிரச்னை அவ்வப்போது எழுப்பப்பட்டது. இன்று வரை இந்தப் பிரச்னை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதன் மூலம் மட்டுமே கச்சத்தீவை மீட்க முடியுமே தவிர, தனிநபரின் முயற்சியால் ஏதும் பலன் விளையாது. ஆனால், தேர்தல் காலத்தில் மட்டுமே கச்சத்தீவைப் பற்றிப் பேசுவது சந்தர்ப்பவாதமா அல்லது வாக்கு அரசியலா என்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதுதான் கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்திருக்கிறார்கள். சீனா, அருணாச்சலபிரதேசத்தின் சில பகுதிகளை ஆக்கிரமித்து அவற்றுக்கு புதிய பெயரையும் சூட்டி விட்டது. இவ்வளவு நடந்த பிறகும் சீனாவுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்காத இந்திய அரசு, கச்சத்தீவை எப்படி மீட்க முடியும் என்கிற கேள்வி எழுகிறது.

கச்சத்தீவை இலங்கைக்கு கொடுக்கும் போதே திமுக தடுத்திருக்க வேண்டும். அப்படி தடுத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. இதனால் மீனவர்கள் தினந்தோறும் அல்லலுறும் நிகழ்ச்சி ஏற்படுகிறது.

தற்போது மீண்டும் தமிழக சட்டப் பேரவையில், கச்சத்தீவை மீட்டே தீர்வோம் என்கிற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. கச்சத்தீவை மீட்பது தொடர்பாக தமிழக சட்டப் பேரவையில் 1991-ஆம் ஆண்டு ஜெ.ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியின் போதுதான் முதன் முதலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து திமுக ஆட்சியிலும், அதன் பின்னர் 2011, 2013, 2016-ஆம் ஆண்டுகளில் அதிமுக ஆட்சியின்போதும், தற்போது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சியிலும் என இது வரை பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திமுக மத்தியில் நீண்ட ஆண்டுகள் கூட்டணி அமைச்சரவையில் அங்கம் வகித்து கோலோச்சியபோது, இந்தப் பிரச்னைக்கு அழுத்தம் கொடுத்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கடந்த 4 ஆண்டு கால திமுக ஆட்சியில் மெத்தனமாக இருந்து விட்டு, இப்போது கச்சத்தீவு மீட்புக்கான தீர்மானத்தை தமிழக சட்டப்பேரவையில் கொண்டு வந்திருப்பதன் மூலம், வாக்கு அரசியலுக்கான ஒரு வாய்ப்பாகவே பார்க்கப்படுகிறது.

சுதந்திரத்துக்குப் பிறகு, அந்தத் தீவின் மீது உரிமையைக் கொண்டாடிய இலங்கை, இந்தியக் கடற்படை தனது அனுமதியில்லாமல் கச்சத்தீவில் பயிற்சி செய்யக்கூடாது என்று கூறியதாகவும், அதன் விளைவாக 1955- இல் தனது விமானப்படை பயிற்சியை கச்சத்தீவில் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கிறார்கள். 'இந்த சிறிய தீவுக்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. அதன் மீதான உரிமையை விட்டுத்தர எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இந்த விவகாரம் நீண்ட காலத்துக்கு நிலுவையில் இருப்பதையோ, மீண்டும் நாடாளுமன்றத்தில் எழுப்பப்படுவதையோ நான் விரும்பவில்லை' என்று முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால்நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தத் தீவின் மீதான உரிமையை பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ராமநாதபுரம் ராஜாவுக்கு அளித்திருப்பதால், அதன் மீது நமக்கு உரிமை இருக்கிறது என அப்போதைய அட்டர்னி ஜெனரல் எம்.சி.ஷெடல்வத் கூறியிருந்தார். அப்போது வெளியுறவுத்துறை இணைச் செயலாளராக இருந்த கே.கிருஷ்ணராவ் உரிமை குறித்து உறுதியாக இல்லை எனவும், ஆனால், அந்தத் தீவைச் சுற்றி மீன்பிடிக்கும் உரிமை கோர சட்ட ரீதியில் வாய்ப்பு இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

1968- இல் இலங்கை பிரதமர் டட்லி சேனநாயக இந்தியாவுக்கு வந்த போது இந்தத் தீவை இலங்கைக்கு அளிப்பது குறித்து ரகசியப் பேச்சுவார்த்தை நடப்பதாக எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பின. நாடாளுமன்றத்தில் இதற்குப் பதிலளித்த அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அப்படி பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றும், ஆனால் கச்சத்தீவு சர்ச்சைக்குரிய பகுதியாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார். இருதரப்பு உறவுகளை மனதில் வைத்து இந்தியா உரிமை கோரவேண்டும் என்று கருத்து அப்போது நிலவியது.

1973- இல் கொழும்பில் நடந்த வெளியுறவுத்துறைச் செயலாளர்கள் இடையிலான பேச்சுவார்த்தைக்குப் பிறகு, கச்சத்தீவு மீதான உரிமையை விட்டுத் தர இந்தியா முடிவு செய்தது. இந்த விவகாரம் வெளியுறவுத்துறைச் செயலாளர் கேவல் சிங் மூலம், அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதிக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் அந்தத் தீவின் மீதான ராமநாதபுரம் ராஜாவின் உரிமை, தனக்குத்தான் அந்தத் தீவு சொந்தமென கூறும் இலங்கை அரசின் உரிமை ஆகியவற்றுக்கான ஆதாரங்களை இருவராலும் காட்ட முடியவில்லை. ஆனால், இலங்கை அரசு பிடிவாதமாக இருப்பதாக கேவல் சிங் குறிப்பிட்டார். 1925 முதல் இலங்கை அரசு அந்தத் தீவின் மீது உரிமையைக் கோரி வருகிறது எனவும் தெரிவித்தார்.

கடல்பகுதியில் எண்ணெய் வளம் இருப்பதை இந்தியா கண்டறிந்ததாலும், இலங்கை அரசின் மீது சீனா ஆதரவு குழுக்களின் செல்வாக்கு அதிகரித்து வந்ததாலும், உடனடியாக தமிழ்நாடு முதலமைச்சர் அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என மத்திய அரசு அழுத்தம் கொடுத்தது. இதன் பின்னர், தமிழக முதல்வர் மு.கருணாநிதி இந்தக் கருத்தை ஏற்க ஒப்புக் கொண்டார். கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது.

மேற்கு வங்கத்தில் இருக்கும் பேருபரி பகுதியை கிழக்கு பாகிஸ்தானோடு இணைக்க அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு முடிவு செய்த போது அம்மாநிலத்தில் காங்கிரஸ் முதல்வரான பி.சி.ராய் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் முடிவு தடுத்து நிறுத்தப்பட்டது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இது குறித்து காங்கிரசின் ஜெய்ராம் ரமேஷ் ஒரு கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். இந்த கச்சத்தீவு ஒப்பந்தம் இந்தியாவுக்கு சொந்தமான நிலப்பரப்பை கையகப்படுத்துவது அல்லது விட்டுக்கொடுப்பது ஆகியவற்றை உள்ளடக்கியதாக இல்லை. ஏனெனில், கேள்விக்குறியான பகுதி ஒருபோதும் வரையறைக்குள் வருவதில்லை என்பது அவரது பதிவு.

ஒப்பந்தங்களின்படி கச்சத்தீவு இந்தியா - இலங்கை சர்வதேச கடல் எல்லைக் கோட்டின் இலங்கைப் பகுதியில் அமைந்துள்ளது என்று 2015 -ஆம் ஆண்டு கச்சத்தீவு குறித்த ஆர்டிஐ கேள்விக்கு வெளியுறவு அமைச்சகம் பதில் அளித்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை அதிபராக ரணில்விக்ரமசிங்க பதவிவகித்தபோது அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த தமிழர் வம்சாவளியைச் சேர்ந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறும் போது, இலங்கையைப் பொருத்தவரையில், கச்சத்தீவு இலங்கை எல்லைக்குள் உள்ளது. கச்சத்தீவு தொடர்பாக இந்தியாவுடன் இது வரை அதிகாரப்பூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற வில்லை. இருந்தாலும், இந்திய அரசின் விருப்பத்துக்கேற்ப ஒரு நாட்டின் எல்லையை மாற்ற முடியாது என்று தெரியப்படுத்தியிருக்கிறார்.

1974- ஆம் ஆண்டு கச்சத்தீவு குறித்தான ஒப்பந்தம் என்பது இந்தியா - இலங்கை இடையிலான சர்வதேச ஒப்பந்தமாக இருப்பதால், அதை மறுபரிசீலனை செய்வதற்கோ அல்லது திரும்பப் பெறுவதற்கோ சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பல்வேறு சவால்கள் உள்ளன. தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஏப்ரல் 2-ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்டுள்ள தனித் தீர்மானம் மத்திய அரசை வலியுறுத்துவதாக அமைந்திருந்தாலும், இது ஒரு மாநில அரசின் கோரிக்கையாக மட்டுமே உள்ளது. இதை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் மத்திய அரசிடமும், சர்வதேச உறவுகளைப் பொருத்தவரை இலங்கை அரசிடமும் உள்ளது.

ராஜதந்திர ரீதியாக இந்தியா - இலங்கை இடையிலான பேச்சுவார்த்தை மூலம் கச்சத்தீவை மீட்பது அல்லது குத்தகைக்கு எடுப்பது போன்ற தீர்வுகள் முன்மொழியப்பட்டாலும் இலங்கை அரசு அதை ஏற்க வேண்டும். தற்போதைய அரசியல் சூழலில் இலங்கை அரசு இதற்குச் சம்மதிக்க வாய்ப்பு குறைவு.

இந்த இடியாப்பச் சிக்கல் நீண்டு கொண்டே வருகிறது. கச்சத்தீவு மீட்பு என்பது கன்னித்தீவு கதையாகி விடுமோ?


(தினமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தகாலத்தை கையாளவேண்டியது தவிர்க்க முடியாத தேவை!



கலாநிதி ஜெகான் பெரேரா



**இலங்கை மெய்யான நல்லிணக்கத்தை அடையவேண்டுமானால், இந்த அனுபவங்களில் இருந்து முறையான படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு, நிலைபேறான தேசிய ஐக்கியத்தை வளர்க்கக்கூடிய ஒரு முறையில் கடந்தகால அநீதிகளைக் கையாளுவதற்கு தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது இன்றியமையாததாகும்.**



இன்று மக்களுக்கு பெரிய முக்கியத்துவம் இல்லாதவையாக மாறிவிட்ட இரு கடந்த கால முக்கிய சம்பவங்கள் திடீரென்று மீண்டும் மேலெழுந்தமை தேசிய அரசியல் சமுதாயத்தை உலுக்கியிருப்பதுடன் மைய அரங்கிற்கும் வந்திருக்கின்றன. பட்டலந்த பிரச்சினை கவனத்தைப் பெறுவதற்கு வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அல் ஜசீரா நேர்காணலும் இலங்கை ஆயுதப்படைகளின் மூன்று முன்னாள் இராணுவ தளபதிகளுக்கும் அரசாங்கப் பக்கத்துக்கு மாறிய விடுதலை புலிகளின் முன்னாள் தளபதி ஒருவருக்கும் எதிராக ஐக்கிய இராச்சிய அரசாங்கம் விதித்த தடைகளுமே அந்த இரு சம்பவங்களாகும்.

தேசிய ரீதியில் கிளம்பினால் என்ன, சர்வதேச மட்டத்தில் கிளம்பினால் என்ன பாரிய குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் ஏதாவது கட்டத்தில் கையாளப்பட வேண்டியவையாக இருக்கின்றன என்பதே இந்த இரு சம்பவங்களும் புகட்டுகின்ற முக்கிய பாடமாகும். அவ்வாறு கையாளப்படாவிட்டால், அவை அடிப்புறத்தில் புரையோடி மிகவும் எதிர்பாராத வகையில் மீண்டும் மேலெழுந்து கையாளுவதற்கு மிகவும் சிக்கலானவையாக மாறிவிடக்கூடும்.

பட்டலந்த விசாரணை முகாமைப் பொறுத்தவரை, கடந்த காலத்தில் புதைக்கப்பட்டுவிட்டதைப் போன்று தோன்றிய அந்த பிரச்சினை திடீரென்று மேலெழுந்திருப்பது பல அனுமானங்களுக்கு வழிவகுத்திருக்கிறது. 37 வருடங்களுக்கு முன்னரான பட்டலந்த பிரச்னை கவனிப்பில் இருந்து ஒருபோதும் முற்றுமுழுதாக அகன்றுவிடவில்லை. ஆனால், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) காலப்பகுதி தொடர்பான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை இருபது வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் வெளியிடப்பட்ட பிறகு அந்த பிரச்னை மக்களின் கவனத்தின் முன்னரங்கத்தில் இல்லாததாக போயிருந்தது.

அன்று நடந்தவை பற்றி அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு சிறுபராயத்தவர்களாக இருந்த இன்றைய இளந்தலைமுறைகைளைச் சேராந்தவர்களும் அதற்கு பிறகு பிறந்தவர்களும் பட்டலந்தவில் நடந்தவை பற்றி பெரிதாக எந்த சிந்தனையும் இல்லாதவர்களாகவே இருப்பர். ஆனால், அல் ஜசீரா தொலைக்காட்சியில் மனித உரிமை மீறல்கள் பிரச்னை மேலெழுந்தவுடன் அது மைய அரங்கை ஆக்கிரமித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி தனது விதிவசமான அந்த நேர்காணலை வழங்கிய நாளில் இருந்து பிரதானபோக்கு ஊடகங்களிலும் சமூக ஊடகக்களிலும் கருத்துக்கள் பெருவாரியாக வெளிவரத் தொடங்கின.

அந்த பிரச்சினையை முழு விழிப்புடன் வைத்திருப்பதற்கு தளராத முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன போன்று தோன்றுகிறது. மே 6 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களுக்கான பிரசாரங்களை மேற்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கு பட்டலந்த பிரச்சினை 'நல்ல தீனியைக்' கொடுத்திருக்கிறது. பட்டலந்தவில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு கொடுக்கப்பட்ட பிரசித்தம் அவற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுகின்ற பிரதான அரசியல் கட்சிகள் ஜே.வி.பி. கிளர்ச்சியில் பங்குபற்றியதாக அல்லது கிளர்ச்சியை ஒடுக்குவதில் பங்குபற்றியதாக அல்லது இரண்டிலும் ஈடுபட்டதாக குற்ஞ்சாட்டப்படக்கூடியவை என்பதே இங்கு பிரச்னை. மாத்தளை போன்ற ஏனைய சித்திரவதை பகுதிகளையும் உள்ளடக்கக்கூடியதாக முறைப்பாடுகளின் வீச்செல்லையை விரிவுபடுத்துவதற்கு இது காரணமாகலாம்.

விடுதலை புலிகளுடனான போர்க் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான பிரச்சினை வெளியில் இருந்து என்றாலும் இந்த நேரத்தில் மீண்டும் கிளப்பப்படுவதற்கு அரசியல் காரணங்கள் இருக்கின்றன. உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் மீதான நாட்டம் சகலருக்கும் பொதுவானதாகவும் அரசியல் நோக்கங்களில் இருந்து விடுபட்டதாகவும் இருக்க வேண்டும். தெரிந்தெடுத்து குறிப்பிட்ட சிலரை நோக்கியதாக நீதியை பிரயோகிக்கக்கூடாது. மனித உரிமைமீறல்களும் போர்க்குற்றங்களும் தற்போது காசாவிலும் உக்ரெயினிலும் இழைக்கப்படுகின்றவை உட்பட சகலதிற்கும் பிரயோகிக்கக்கூடிய சர்வதேச தராதரங்களை வேண்டிநிற்கின்றன என்கிற அதேவேளை, மேற்கிளம்புகின்ற பிரச்னைகள் அரசியல் தேவைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டவையாக இருக்கின்றன.

ஐக்கிய இராச்சியத்தினால் நான்கு இராணுவ தளபதிகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளை அந்நாட்டு அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அமைச்சர் தனது வாக்காளர்களுக்கு தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் ஒரு நடவடிக்கை என்று நியாயப்படுத்தினார். இலங்கையில் பொறுப்புக்கூறலையும் நீதியையும் கோரி முன்னரங்கத்தில் நிற்கின்ற நாடுகள் வாக்கு வங்கிகளாக செயற்படும் பெருமளவு புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தைக் கொண்டிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. தென்னாபிரிக்காவாக இருந்தாலென்ன, கிழக்கு திமோராக இருந்தாலென்ன மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக சர்வதேச ரீதியில் வழக்குகளை தொடுப்பதற்கு நீண்டகாலம் செல்கிறது. புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை இலங்கையில் பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதில் நீண்டகாலத்துக்கு நின்றுபிடிக்கக்கூடியதாக வல்லமையும் வளங்களும் இருக்கின்றன.

இராணுவ தளபதிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டிருக்கும் தடைகளுக்கு அரசாங்கத்தின் பதில் வெளிநாட்டு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய ஒருதலைப்பட்சமான தீர்மானங்கள் தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய பணிகளுக்கு உதவுவதற்கு பதிலாக அவற்றை மேலும் சிக்கலாக்குகிறது என்பதாகவே இருந்தது. தன்னடக்கமாக பிரதிபலிப்பை வெளியிட்டமைக்காக அரசாங்கம் கடுமையான கண்டனங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. சர்வதேச சமூகத்துக்கு எதிராக மிக வும் கடுமையான பதிலடியை அரசாங் கம் கொடுத்திருக்க வேண்டும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், இத்தகைய பிரச்சினையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தான் முதன்முதலாக எதிர்நோக்குகிறது என்றில்லை. முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் இராணுவ தளபதிகளுக்கு எதிராக மாத்திரமல்ல, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிராகக் கூட தடைகள் விதிக்கப்பட்டன. ஐக்கிய இராச்சியத்தினால் தற்போது தடைவிதிக்கப்பட்டிருக்கும் முன்னாள் தளபதிகளில் ஒருவருக்கு எதிராக 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க அரசாங்கமும் தடைகளை விதித்தது. அதைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டில் கனடா அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகள் இருவருக்கு எதிராக தடைகளை விதித்தது. அதற்கு எதிராக அந்த நேரத்தில் இலங்கையில் பதவியில் இருந்த இரு அரசாங்கங்கள் கடுமையான நிலைப்பாட்டை எடுத்ததை காணக்கூடியதாக இருக்கவில்லை.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012 ஆண்டில் இருந்து இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவது கிரமமான நிகழ்வுகளாக இருந்து வருகின்றன. கடந்தகால மனித உரிமை மீறல்களை கையாளுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்தபோது 2009 ஆண்டில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட முதன்முதலான தீர்மானத்தை தவிர அதை தொடர்ந்து வந்த சகல தீர்மானங்களிலும் பெருமளவு வாக்குகள் வித்தியாசத்தில் இலங்கை தோல்வியையே கண்டுவந்திருக்கிறது.

இந்த செயன்முறைகள் தற்போது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சான்றுகளைத் திரட்டுவதற்கு தனியான பிரிவு ஒன்று அமைக்கப்படுகின்ற அளவுக்கு சென்றிருக்கின்றன. அந்த சான்றுகளை சர்வதேச அரசாங்கங்கள் பயன்படுத்த முடியும். வெளிநாடுகளில் உள்ள சர்வதேச நீதிமன்றங்களின் முன்பாக இலங்கை தலைவர்களை கொண்டுபோக முடியும் என்பதால் அவர்களைப் பொறுத்தவரை இது பாதுகாப்பான ஒரு சூழ்நிலை அல்ல. இத்தகைய போக்கு ஒரு முடிவுக்கு வரவேண்டியது இலங்கையின் இறைமைக்கும் கௌரவத்துக்கும் முக்கியமானதாகும்.

நல்லிணக்கம், நீதி மற்றும் சகல சமூகங்களையும் அரவணைக்கும் அபிவிருத்தியை மேம்படுத்துகின்ற அதேவேளை, மோதலுக்கான மூலவேர்க் காரணிகளை கையாளக்கூடியதுமான பல்பரிமாண அணுகுமுறை ஒன்று இலங்கையின் அமைதியான எதிர்காலத்துக்கு அவசியானதாகும். சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்களுக்கு அரசாங்கத்தின் இதுவரையான பதில் காணாமல்போனோர் விவகார அலுவலகம் போன்ற ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் உள்நாட்டுப் பொறிமுறைகளை பலப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியாகவே இருக்கிறது. அதற்கு மேலதிகமாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது. இந்த ஆணைக்குழு தொடர்பில் தேசிய கருத்தொருமிப்பை பெறுவதில் அரசாங்கம் சிக்கலை எதிர்நோக்குகிறது. இந்த பொறிமுறைகளின் பெறுமதி குறித்து தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் குழுக்களும் சந்தேகம் கிளப்பியிருக்கின்றன.

அவர்கள் ஒன்றுக்கு பின் ஒன்றாக எத்தனையோ ஆணைக்குழுக்களை கண்டுவிட்டார்கள். அத்தகைய ஆணைக்குழுக்களின் தேவை குறித்து கேள்வி எழுப்பி சிங்கள தேசியவாத கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றன.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது விதியின் திருப்பம் அல்ல அரசியல் விதியின் யதார்த்தம்



யதீந்திரா

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நான்காவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இதன் போது பல புதிய உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன. பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடும் இதில் ஒன்று. நீண்டகாலமாக இழுபறிநிலையில் இருந்த திருகோணமலை, சம்பூர் சூரிய மின்கலத் திட்டத்தை இரு நாட்டுத் தலைவர்களும் அங்குராப்பணம் செய்து வைத்திருக்கின்றனர். ஜே.வி.பியின் தலைமையிலான ஆட்சியில் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு செய்து கொள்வதை குமார் குணரத்தினம், ஒரு குற்றமாக சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

குணரத்தினம் ஜே.வி.பின் முன்னை நாள் மத்திய குழு உறுப்பினர். பின்னர் ஜே.வி.பியிலிருந்து வெளியேறிய அவர், தற்போது முன்னிலை சோசலிசக் கட்சி என்னும் அடையாளத்துடன் இயங்கி வருகின்றார். ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சி 1971, ஏப்பிரல். 5ம் திகதி இடம்பெற்றது. அதே திகதியில்தான் இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதனை விதியின் திருப்பம் என்று குமார் குணரட்டணம் குறிப்பிட்டிருக்கின்றார். ஜே.வி.பி சோசலிசப் பாதையில் பயணிக்கவில்லை - மாறிவிட்டது - சோசலிசத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் உண்மையான ஜே.வி.பி உறுப்பினர்கள் அமைதியாக இருக்கக் கூடாது என்றும் குணரட்ணம் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜே.வி.பியின் கிளர்ச்சி இடம்பெற்ற அதே திகதியில் இந்திய பிரதமரின் பயணத்தை ஜே.வி.பி விரும்பியதா அல்லது இது ஒரு தற்செயல் நிகழ்வா? எதுவாகவும் இருக்கலாம் ஆனால் இப்போது அது ஒரு பிரச்சினையில்லை. ஜே.வி.பியின் கடந்த காலம் முழுவதும் இந்திய எதிர்ப்புடன் பயணித்த காலம்தான் ஆனால் ஜே.வி.பி விடுதலைப் புலிகள் போல் இந்திய அமைதிப் படையை எதிர்த்து இராணுவ ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. இந்தியாவுடன் உறவை புதுபித்துக்கொள்ள முடியாதளவிற்கான வரலாற்று நெருக்கடிக்குள் சிக்கவில்லை. ஒரேயொரு சம்பவம்தான் அந்தக் காலத்தில் பதிவாகியிருக்கின்றது. ஜே.வி.பியின் திருகோணமலை நடவடிக்கைகளை கையாண்ட குமார் குணரட்ணம், இந்திய அமைதிப் படையை நோக்கிகைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகப் பதிவுண்டு.

இந்த ஒரு சம்பவத்தைத் தவிர வேறு எந்தவொரு சம்பவங்களும் பதிவாகவில்லை. ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்பு என்பது அடிப்படையில் இந்தியாவை எதிரியாகக் காண்பித்து, சிங்கள தேசியவாத அரசியலுக்கு தலைமை தாங்கும் நோக்கம் கொண்டது. அன்றைய சூழலில் ஜே.வி.பி இந்தியாவை ஒரு விஸ்தஸ்தரிப்புவாத நாடாக நோக்கியது. அந்த அடிப்படையில்தான் அதன் ஐந்து அரசியல் வகுப்புக்களில் ஒன்று இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றியதாக இருந்தது. ஆனால் அரசியலில் அதிகாரத்தில் இருப்பதும், வெறும் கலக அமைப்பாக இருப்பதும் ஒன்றல்ல - மலையும் மடுவும் போன்றது. கலக அரசியலில் எதனையும் பேசலாம் ஆனால் ஒரு நாட்டை கலக வழியில் நடத்திச் செல்ல முடியாது. அதிலும் ஒரு பிராந்திய பேரரசிற்கு அருகில் இருக்கும் போது நிதானமும் தூரநோக்கும் ஆட்சியாளருக்கு அவசியம். ஏனெனில் கரணம் தப்பினால் மரணம்.

இந்த அடிப்படையில் நோக்கினால்,



> ஈழத் தமிழர் அரசியல் நின்றுநிலைப்பதும் வெறும் சுலோகங்களால் சீரழிந்து போவதும் தமிழ் மக்களை பிரதிநித்துவம் செய்வதாக தம்பட்டமடிக்கும் அரசில் தரப்புக்களின் புத்திசாலித்தனமான செயல்பாடுகளிலேயே தங்கியிருக்கின்றது. இந்தியா ஈழத் தமிழரோடு இருக்கும் வரைக்கும்தான், ஈழத் தமிழ் சமூகத்திற்கு அரசியல்ரீதியில் பெறுமதியிருக்கும்.

இன்றைய ஜே.வி.பியானது, இந்தியாவின் கரிசனைகளையும் தேவைகளையும் புறம்தள்ளினால் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதை சரியாகவே புரிந்து வைத்திருப்பதாகத் தெரிகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பில் எரிக் சூல்கெய்ம் ஒன்றைக் கூறுவார். அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு இறுதி வரையில் இந்தியாவைப் புரிந்து கொள்ளவேயில்லை. எல்லாம் முடியும் தறுவாயில் அன்ரன் பாலசிங்கம் கடந்த காலத்தை பெருந்தன்மையுடன் பின்னுக்கு வைக்குமாறு இரந்து பார்த்தார் ஆனால் அரசியலில் அவ்வாறான இரத்தல்களுக்கு எப்போதுமே பெறுமதியிருப்பதில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ஜே.வி.பியின் இன்றைய புரிதல் மற்றும் அணுகுமுறை விதியின் திருப்பம் அல்ல - அது அரசியல் விதியின் யதார்த்தம்.

அரசியலில் விருப்பங்களும் யதார்த்தங்களும் என்றுமே ஒரு புள்ளியில் சந்திப்பதில்லை. அரசியலில் விருப்பங்களை உயர்வாக எவர் கருதுகின்றாரோ, அவர்கள் பிரநிதித்துவப்படுத்தும் மக்கள் கூட்டம், ஒரு போதுமே எதையும் அடையாது - மாறாக, இருப்பதையும் இழப்பார்கள். இதற்கான சிறந்த ஆதாரம்தான் ஈழத் தமிழர் அரசியல். கடந்த எழுபந்தைந்து வருடங்களாக விருப்பங்களை மட்டுமே தமிழ் அரசியல் தரப்பினர் கூறிக்கொண்டிருக்கின்றனர் ஆனால் அந்த விருப்பங்களை நோக்கி இதுவரையில் சிறிய முன்னேற்றத்தைக் கூட அடைய முடியவில்லை. ஆனாலும் இப்போதும் விருப்பங்களை கூறுவதிலும், யார் சிறப்பாக கூறுகின்றனர் என்பதிலும் தங்களுக்குள் மோதிக் கொள்கின்றனர்.

ஆனால் யதார்த்தமோ வேறாக இருக்கின்றது. கடந்த 75 வருடகால அரசியலில் என்ன நடந்தது என்பது பற்றி பேசிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை ஆனால், இந்தக் காலகட்டத்திலிருந்து நாம் எதனைக் கற்றுக் கொண்டோம் என்பதுதான் முக்கியமானது.

மோடியின் விஜயத்தின் போது மீண்டும் இந்தியாவின் கரிசனைகள் தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் யாப்பை முழுமையாக அமுல்படுத்துவது, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் இந்தியாவின் கரிசனைகளை மோடி வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இதற்கப்பால் இந்தியா எதனையும் கூறப் போவதில்லை - கூறவும் முடியாது. மோடியின் விஜயத்தின் போது முன்னைய ஆட்சியாளர்கள் எவருமே செய்யாத ஒரு விடயத்தை அனுர குமார செய்திருக்கின்றார். “இலங்கை மித்திர விபூசன” என்னும் அதியுயர் கௌரவத்தையும், இந்தியப் பிரதமர் மோடிக்கு வழங்கியிருக்கின்றார். இந்த விடயத்தை எவருமே கற்பனை கூட செய்திருக்க மாட்டார்கள். ஒரு காலத்தில் விஸ்தரிப்புவாத நாடு என்று கூறி, இந்தியாவை எதிர்ப்பதை ஒரு பிரதான அரசியலாகக் கொண்டிருந்த தலைமுறையிடம் அரசியலை கற்றுக்கொண்ட ஒருவர், இந்தியாவை உற்ற நண்பன் என்று கௌரவிக்கின்றார்.

இதனை ஒரு வரியில் கூறுவதாயின், இதுதான் அரசியல் யதார்த்தம். இங்கு யதார்த்தங்களே வெல்லுகின்றன. யதார்த்தங்களை விருப்பங்களால் தோற்கடிக்க முடியும் என்று எண்ணுபவர்கள் வரலாற்றில் பரிதாபமாக தோற்றுப் போகின்றனர். ஜே.வி.பி பல தசாப்தகால முயற்சிகளுக்கு பின்னர் அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றது அதனை பேணிப் பாதுகாப்பதும், மீண்டும் வீழ்ந்து தொலைந்து போகாமல் இருப்பதும் முற்றிலுமாக, அவர்களுடைய அணுகுமுறைகளில் மட்டுமே தங்கியிருக்கின்றது. அரசியலை பொறுத்தவரையில் தீதும் நன்றும் வெளியிலிருந்து வருவதில்லை. நலன்களுக்கான சூதாட்டங்களால் சூழப்பட்டிருக்கும் அரசியல் அரங்கில் எழுவதும் வீழ்வதும் குறிப்பிட்ட சூழலை ஒரு அரசியல் அமைப்பு எவ்வாறு கையாளுகின்றது என்பதிலேயே தங்கியிருக்கின்றது.

ஈழத் தமிழர் அரசியல் நின்றுநிலைப்பதும் வெறும் சுலோகங்களால் சீரழிந்து போவதும் தமிழ் மக்களை பிரதிநித்துவம் செய்வதாக தம்பட்டமடிக்கும் அரசில் தரப்புக்களின் புத்திசாலித்தனமான செயற்பாடுகளிலேயே தங்கியிருக்கின்றது. இந்தியா ஈழத் தமிழரோடு இருக்கும் வரைக்கும்தான், ஈழத் தமிழ் சமூகத்திற்கு அரசியல்ரீதியில் பெறுமதியிருக்கும். ஈழத் தமிழரின் அரசியல் முகம் என்பது தனித்த ஒன்றல்ல - தனித்து இருக்கும் போதேல்லாம் முகத்தை பாதுகாப்பதற்கே தமிழர் திண்டாட நேரிடும் ஆனால் ஒரு அர்த்தநாரீஸ்வர தோற்றத்தில் அரசியலை பேணிக் கொண்டால் முகமும் தப்பும், அடையாளமும் தப்பும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் மோடியின் விஜயம் இலங்கை உறவில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?

**முரளிதரன் காசி விஸ்வநாதன்**

இலங்கையின் ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்ற பிறகு முதல் முறையாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 4ஆம் தேதி இலங்கை வந்திருக்கிறார். இந்தப் பயணத்தில் என்ன எதிர்பார்க்கலாம்?

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 4ஆம் தேதி இலங்கை வந்திருக்கிறார். இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ள இந்தியப் பிரதமர், இன்று ஏப்ரல் 6ஆம் தேதி வரை தங்கியிருப்பார். அதற்குப் பிறகு ராமேஸ்வரத்திற்கு புறப்பட்டுச் செல்வார்.

தாய்லாந்தில் நடக்கும் பிம்ஸ்ரெக் உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட பிறகு, அங்கிருந்து புறப்பட்டு வெள்ளிக்கிழமை மாலையில் கட்டுநாயக்கேவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பிரதமர் நரேந்திர மோடி வந்து இறங்கினார். அவருடன் வெளியுறவுத் துறை அமைச்சர், வெளியுறவுச் செயலர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்டோரும் வந்திருக்கின்றனர். ஏப்ரல் 5ஆம் தேதி கொழும்பு நகரில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்கு அரச வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் இலங்கை ஜனாதிபதி, பிரதமர், மூத்த அமைச்சர்கள் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் ஒரு சிறிய வரவேற்பு நிகழ்ச்சி மற்றும் அதற்குப் பிறகு ஜனாதிபதி அநுர குமார திஸாநாய்க்கவுக்கும் பிரதமர் மோடிக்கும் இடையிலான இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. மொத்தமாக எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாக இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் விஜித ஹேரத் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இந்தப் பயணத்தின்போது, அவருக்கு 'மித்ர விபூஷணா' என்ற விருது வழங்கப்பட இருப்பதாகவும் இந்திய அமைதி காக்கும் படையில் பணியாற்றி உயிரிழந்த வீரர்களின் நினைவிடத்திற்குச் சென்று பிரதமர் மரியாதை செலுத்தவுள்ளதாகவும் விஜித ஹேரத் ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

இன்று ஏப்ரல் 6ஆம் தேதி அநுராதபுரத்தில் உள்ள மகாபோதி கோவிலுக்கு பிரதமர் மோடி செல்கிறார். அதற்குப் பிறகு, இந்திய உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரயில் சமிக்ஞை கட்டமைப்பைத் திறந்து வைக்கும் நிகழ்வும் நடக்கவிருக்கிறது. இந்த நிகழ்வு முடிந்த பிறகு, அங்கிருந்து ராமேஸ்வரத்திற்கு பிரதமர் புறப்படுகிறார்.

இந்திய பிரதமரின் இந்த இலங்கைப் பயணம் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே இரு தரப்பாலும் பார்க்கப்படுகிறது. இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தேர்வு செய்யப்பட்டார்.

அநுரகுமாரவின் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன, இந்திய எதிர்ப்பிற்குப் பெயர்போன கட்சி. இந்தியாவின் இலங்கை குறித்த கொள்கையை ஜனதா விமுக்தி பெரமுன நீண்ட காலமாகவே விமர்சித்து வந்தது. ஒரு விரிவாக்கப் பார்வையுடனயே இலங்கையை இந்தியா அணுகுவதாகக் குற்றம் சாட்டியும் வந்தது. இவையெல்லாம் சேர்ந்து, அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்கு சாதகமற்ற ஜனாதிபதி என்ற தோற்றத்தையே ஏற்படுத்தியிருந்தன.


ஆனால், புதிய ஜனாதிபதி விவகாரத்தில் இந்தியா மிகக் கவனமாகவே இருந்தது. ஜனாதிபதி தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்பாகவே, அதாவது பிப்ரவரி மாத வாக்கிலேயே அவரை இந்தியாவுக்கு அழைத்து இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். இந்திய எதிர்ப்புப் பார்வையைக் கொண்ட கட்சியாக அறியப்படும் ஜனதா விமுக்தி பெரமுனவுடன் இணைந்து செயல்பட இந்தியா தயங்கப் போவதில்லை என்பதையும் இது சுட்டிக்காட்டியது.

அநுர குமார திஸாநாயக்க தேர்தலில் வெற்றி பெற்றவுடன் பிரதமர் நரேந்திர மோடி உடனடியாகத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். இருந்தபோதும் அநுர குமார இந்தியாவை எப்படி அணுகுவார் என்பது தெளிவில்லாமல் இருந்த நிலையில், தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ள முடிவு செய்தார் ஜனாதிபதி. இது, இந்தியப் பெருங்கடல் அரசியலில் தான் இந்தியாவுக்கு எதிராக இருக்கப் போவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்தது.

இந்தப் பின்னணியில்தான் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கைக்குச் செல்லவிருக்கிறார். அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியான பிறகு, அந்நாட்டிற்குச் செல்லும் முதல் வெளிநாட்டுத் தலைவர் நரேந்திர மோடிதான்.

இந்திய பிரதமரின் இந்தப் பயணத்தில் முக்கிய நிகழ்வாக அமையவிருப்பது, சம்பூர் மின் திட்ட கட்டுமானப் பணிகளின் துவக்கவிழா நிகழ்வுதான்.

திருகோணமலையில் உள்ள சம்பூரில் அமையவிருக்கும் இந்த மின் திட்டம், பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வரும் ஒரு மின் திட்டம். 2006ஆம் ஆண்டில் 500 மெகா வாட் உற்பத்தித் திறனுடன் சம்பூரில் ஓர் அனல் மின் நிலையம் இந்திய ஒத்துழைப்புடன் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.





> இந்தியாவை பொறுத்தவரை, இலங்கை பிராந்திய ரீதியில் மிக முக்கியமான நாடு. இலங்கையிலும் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானது. ஆகவே, சர்ச்சைக்குரிய விஷயங்கள் எதையும் இப்போது பேச மாட்டார்கள். இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால அபிலாஷைகள் குறித்துப் பேசுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

ஆனால், இதற்கு அடுத்தகட்ட ஒப்பந்தங்கள் இலங்கை அரசு, இலங்கை மின்சார சபை, இந்தியாவின் தேசிய அனல் மின் கழகம் ஆகியவற்றுக்கு இடையில் 2013இல் தான் கையெழுத்தாகின. பிறகு 2016-வாக்கில், அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக, எரிவாயுவில் இயங்கும் மின் நிலையமாக இது உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது, இது சூரிய மின் திட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது.

முதல் கட்டமாக, 50 மெகா வாட் உற்பத்தித் திறனுள்ள திட்டத்தின் கட்டுமானப் பணிகள் துவங்கவிருக்கின்றன. அடுத்த கட்டமாக 70 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள திட்டம் செயல்பாட்டுக்கு வரும். இந்த மின் நிலையத்தை இலங்கை மின்சார சபையும் தேசிய அனல் மின் கழகமும் சேர்ந்து செயல்படுத்தவுள்ளன.

இந்த மின்திட்டம் இலங்கையின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் 28ஆம் தேதியன்று டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறைச் செயலர் விக்ரம் மிஸ்ரி, 'இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பில் இந்தத் திட்டம் மிக முக்கியமான ஒரு மைல் கல்' எனத் தெரிவித்தார்.

அதேபோல, பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படலாம் என சூசகமாகத் தெரிவித்திருக்கிறார் விக்ரம் மிஸ்ரி. ஆனால், அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்த பிற தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், இந்த ஒப்பந்தம் கவனம் பெற்றிருக்கிறது. மேலும், இரு நாடுகளுக்கும் இடையில் பல ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு நடவடிக்கையாகவும் இது பார்க்கப்படுகிறது. இந்த விவகாரம் குறித்து ஊடகங்களில் பேசியுள்ள விஜித ஹேரத், பயிற்சியளிப்பது, சில கருவிகளைப் பெறுவது தொடர்பான ஒப்பந்தமாக இது இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

'கடந்த முறை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் இந்த விவாகரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக பிரதமர் மோடி செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். ஆனால், அந்தத் தருணத்திலும் அதற்குப் பிறகும் இலங்கை இது தொடர்பாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, இதுபோன்ற ஒப்பந்தம் கையெழுத்தாவது இரு நாடுகளின் பாதுகாப்பிற்கும் அப்பால் சென்று இந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருக்கும்,' என்கிறார் வெளியுறவு விவகார ஆய்வாளரான என். சத்தியமூர்த்தி.

இவை தவிர, இரு நாடுகளுக்கும் இடையில் மின் கட்டமைப்பை உருவாக்குவது, இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் - இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து திருகோணமலையை எரிசக்தி மையமாக வளர்த்தெடுப்பது, கடன் மறுசீரமைப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தங்களும் கையெழுத்தாகவுள்ளன.

ஆனால், இரு தரப்பு உறவிலும் பேசித் தீர்க்க வேண்டிய சில நெருடலான அம்சங்களும் இருக்கவே செய்கின்றன. குறிப்பாக, மன்னாரில் அதானி நிறுவனத்தால் அமைக்கப்படவிருந்த காற்றாலை மின் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கும் விவகாரம். இலங்கையில் அதானி குழுமம் இரு திட்டங்களை முன்னெடுத்தது. ஒன்று, மன்னார் - பூநகரி காற்றாலை மின் திட்டம். இரண்டாவது, கொழும்பு துறைமுகத்தில் செயல்படுத்தப்படும் திட்டம். இந்த இரண்டாவது திட்டம் எந்தச் சிக்கலும் இன்றி செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், காற்றாலை மின் திட்டம் சில காரணங்களால் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை முதலீட்டு சபை, 442 மில்லியன் டாலர் மதிப்பீட்டில் 350 மெகா வாட் உற்பத்தித் திறனுள்ள காற்றாலைகளை அமைக்க, 2023 பிப்ரவரியில் அனுமதி அளித்தது. அதன்படி 250 மெகா வாட் உற்பத்தித் திறனுள்ள காற்றாலைகள் மன்னாரிலும் 100 மெகா வாட் உற்பத்தித் திறனுள்ள காற்றாலைகள் பூநகரியிலும் அமைக்கப்படும்.

இந்தத் திட்டத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை நாட்டின் பிற பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல மின் தொடரமைப்பும் நிறுவப்படும். ஆனால், இந்தத் திட்டத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்பு இருந்து வந்தது. 2024ஆம் ஆண்டில் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை '8.26 அமெரிக்க சென்ட்டிற்கு ஒரு யூனிட்" என்ற விலைக்கு வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தத் திட்டத்திற்கு எதிராக தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலேயே அநுர குமார திஸாநாயக்க பேசி வந்தார். இந்தத் திட்டத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் விலை மிக அதிகமாக இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார். அவர் ஜனாதிபதியான பிறகு, இந்தத் திட்டத்தில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தின் விலை குறித்து மீண்டும் விவாதிக்க அவரது அமைச்சரவை முடிவு செய்தது.

ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை 6 அமெரிக்க சென்ட்டிற்கு குறைவாக இருக்க வேண்டுமென இலங்கை அரசு விரும்பியது. இதையடுத்து இந்தத் திட்டத்தை நிறுத்தப் போவதாக அதானி நிறுவனம் அறிவித்தது. இருந்தபோதும், இந்தத் திட்டத்திற்காக சுமார் 5 மில்லியன் டாலர்கள் அளவுக்கு ஏற்கெனவே செலவழித்துவிட்ட நிலையில், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அதானி நிறுவனம் ஆர்வமாகவே இருக்கிறது. இந்தப் பயணத்தின்போது இந்தத் திட்டம் குறித்து ஏதும் விவாதிக்கப்படுமா என அதிகாரபூர்வ அறிவிப்புகள் ஏதும் இல்லை.

'வெளிப்படையாக இதுகுறித்துக் குறிப்பிடாவிட்டாலும் அதானி மின் திட்டம் குறித்துப் பேச வாய்ப்பிருக்கிறது' என்கிறார் கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கலாநிதி கோபாலபிள்ளை அமிர்தலிங்கம்.

'மேலும் மன்னாருக்கும் இந்தியாவுக்கும் இடையில் நில ரீதியான பாலம், மின் தொடரமைப்பு ஆகியவற்றைக் கொண்டு வருவதில் இந்தியா ஆர்வம் காட்டுகிறது. இவை தவிர, இந்தியாவிலிருந்து குழாய் மூலம் பெட்ரோலை இலங்கைக்குக் கொண்டு வருவதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த விஷயங்களைப் பற்றித் தான் முக்கியமாகப் பேசுவார்கள்' என்கிறார் அவர்.

அடுத்ததாக, எல்லை தாண்டி மீன் பிடிக்கும் குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரம். தமிழ்நாடு அரசு தரும் தகவல்களின்படி கடந்த 2024ஆம் ஆண்டில் மட்டும் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில், 528 (சில தருணங்களில் 530 எனக் குறிப்பிடப்படுகிறது) தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 2025ஆம் ஆண்டு ஜனவரியில் மட்டும் 53 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா தமிழர் தகவலின் 34வது ஆண்டு விருது விழா!

கனடியத் தமிழரின் தனித்துவ அடையாளமாகத் திகழும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 34வது ஆண்டு விருது விழா இன்று ஏப்ரல் 6ம் திகதி ஞாயிற்றுக் கிழமை கனடா, ரொறன்ரோவின் நகரசபை மண்டபத் தில் இடம்பெறவுள்ளது. கனடியத் தமிழர் சமூகத்தில் 1992ம் ஆண்டு முதன்முதலாக விருதுகள் வழங்குவதை ஆரம்பித்து வைத்த தமிழர் தகவலின் 34வது ஆண்டாக இன்றைய விழா இடம்பெறுகிறது.


முன்னைய ஆண்டுகளைப் போன்று இன்றைய விழா விலும் துறைசார் பிரமுகர்கள் ஏழு பேர் அவர்களுக்கான விருதுடன் தங்கப்பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்படுகின் றனர். தமிழ் இலக்கியப் பணி, தொடர் சமூகப்பணி, தொழில் சாதனை முனைவர், ஊடகத்துறை, கலைப்பணி, மூத்தோர் சேவை ஆகியவைகளுடன் பன்முக ஆற்றல் மிகு சாதனை இளைஞர் ஆகியதாக இவ்விருதுகள் வழங் கப்படுகின்றன.

தமிழ் ஒலிபரப்புத்துறையில் அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள சர்வதேச புகழ்பெற்ற ஒலிபரப்பாள




ரும் கலைஞருமான திரு. பி.எச்.அப்துல் ஹமீத் இவ்விழா வில் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கி கௌர விக்கப்படுகின்றார். விழாவில் நேரடியாகப் பங்குபற்றுவ தற்காக இவர் கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா செள விருது விழா வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று விருதுகளை வழங்கி துறைசார் பிரமுகர்களுக்கு மதிப்பளிக்கவுள் ளார். ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையின் தலைவர் திரு. நீதன் சண்முகராஜா விருது விழாவுக்கு தலைமை தாங்குகிறார். விருதுகள் தெரிவுக்குழுவின் தலைவரான




பேராசிரியர் அமுது யோசெப் சந்திரகாந்தனின் நெறிப்ப டுத்தலில் விருது பெறுநர்களை அறிமுகம் செய்யும் உரைகள் இடம்பெறும்.

தமிழர் தகவலின் 34வது அண்டு பூர்த்தி மலர் 'இள முகில் சுவடு' என்ற மகுடத்தில் இவ்விழாவில் வெளியி





டப்படவுள்ளது. பதினான்கு வயது முதல் எண்பத்து நான்கு வயது வரையான மூன்று தலைமுறையினரின் அறுபத்துநான்கு ஆக்கங்களுடன் 164 பக்கங்களில் இம்மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களின் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளது. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலான ஆண்டு மலரின் வெளியீட்டு அரங்கு முழுமையாக தமிழ் இளையோரின் நெறிப்படுத் தலில், இளையவர் ஒருவர் தலைமையில் தனித்தமிழில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளிவர ஆரம் பித்த தமிழர் தகவல் கடந்த 34 ஆண்டுகளில் ஒரு மாதம் கூடத் தவறாமல், முக்கியமாக கொரோனா நோய்த் தொற்றுக்காலத்திலும்கூட அறாத்தொடராக வெளிவந் தது ஒரு சாதனையாகும். கனடாவின் எந்தவொரு அர சாங்கத்திடமிருந்தும் நிதி பெறாது, நூற்றுக்கு நூறு வீதம் இங்கு வாழும் தமிழர் சமூக வணிகர்களின் பங்க ளிப்புடன் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

தமிழர் தகவலை ஸ்தாபித்து, இதன் வெளியீட்டாள ராகவும் முதன்மை ஆசிரியராகவும் செயற்படுபவர் இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளரான திரு எஸ். திருச்செல்வம் அவர்கள். 1980களில் யாழ்ப்பாணத்திலி ருந்து வெளிவந்த ஈழமுரசு, முரசொலி ஆகிய தமிழ்த் தினசரிகளின் முதன்மை ஆசிரியராக கடமையாற்றியவர் இவர்.

# 48 மணி நேரம்




**கனடா 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 34வது ஆண்டு விருது விழா இன்று நடைபெறுகின்றது. அதன் நினைவாக தமிழர் தகவல் சஞ்சிகையின் மார்ச் மாத இதழில் வெளிவந்த கட்டுரை ஒன்றை இங்கே தருகின்றோம்**

**அ.முத்துலிங்கம்**

ஒரு காலத்தில் தசாவதானி, அட்டாவதானி என்றெல்லாம் இருந்தார்கள். இப்பொழுதும் இருக்கக்கூடும், நான் சந்தித்ததில்லை. அட்டாவதானி ஒரே நேரத்தில் எட்டு விசயங்களில் கவனம் செலுத்து வார். தசாவதானியால் ஒரே நேரத்தில் பத்து விசயங்க ளில் கவனம் செலுத்த முடியும். அவர்களுக்கு பரீட்சை கூட இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் சொல்லும் பொருளில் அவர் ஒரு வெண்பா இயற்றுவார். அதே சமயம் நான்கு தானத்தை நான்கு தானத்தால் மனதினால் பெருக்கி விடையை சொல்வார். அவர் முதுகிலே ஒருவர் பூக்களை எறிவார். எத்தனை பூக்கள் என்று அவர் கணக்கு வைக்கவேண்டும். கையிலே ஒரு புத்தகத்தை வைத்து படித்துக்கொண்டே இருப்பார். என்ன படித்தார் என்பதை அவர் பின்னர் சொல்லவேண் டும். கூட்டத்தில் இருந்து ஒருவர் சைகை காட்டுவார். இன்னொருவர் வாத்தியத்தில் ஒரு ராகத்தை வாசிப்பார், அவை என்னவென்றெல்லாம் சொன்னால்தான் இவர் தசாவதானி. இப்படி பல விசயத்தை ஒரே நேரத்தில் செய்யும் திறமை பெற்றவர்கள் அரிது.

இப்பொழுது தசாவதானம் என்று ஒருவரும் சொல்வ தில்லை, அதற்கு அரடவவையளமமைபெ என்று பெயர். இதற்கான பயிற்சிகளும், விளையாட்டுகளும் வந்துவிட் டன. வளரும் நாடுகளிலும் வளர்ந்த நாடுகளிலும் பன் செயல்திறன் கொண்டவர்களுக்குத்தான் வேலை கிடைக் கிறது. நேர்முகத்தேர்வில் அவர்களுக்கு multitasking பயிற்சி உண்டா என்றுகூட கேட்கிறார்கள். அது இல் லாவிட்டால் வேலை கிடைப்பது கடினம்.

பெண்கள் இதில் வல்லவர்களாக இருக்கிறார்கள். இயல்பாகவே அவர்களுக்கு அந்த திறமை உண்டு. நேற்று ஒரு பெண்ணை சுப்பர்மார்க்கட்டில் பார்த்தேன். ஓடிப்பிடித்து விளையாடும் அவருடைய இரண்டு பிள் ளைகளை அதட்டியபடியே தள்ளு வண்டியில் ஒவ் வொரு சாமானாக எடுத்துப்போட்டு அதை நிரப்பிக் கொண்டிருந்தார். செல்பேசியில் பேச்சு நடந்தது. அங்கே வேலை செய்யும் பணியாளரிடம் ஏன் இன்னும் 'குவினோவா' பக்கட்டுகள் வரவில்லை என விசாரித் தார். கடன் அட்டையை எடுத்து உரசி காசாளரிடம் பணத்தை கட்டிவிட்டு ஒன்றுமே நடக்காததுபோல காரை நோக்கி அசைந்தபடி, பிள்ளைகள் பின்னால் இழு பட போனார். செல்பேசியை காதில் இருந்து அவர் எடுக் கவே இல்லை.

கடும் உழைப்புத் தரும் ஒருவருக்கும் தசாவதானிக் கும் ஏதாவது ஒற்றுமை இருக்கும் என்று பார்த்தால் அப்படி ஒன்றும் கிடையாது. தசாவதானியை பெரும் உழைப்பாளி என்று ஒருவரும் சொல்வதில்லை.

எனக்குப் பழக்கமான ஓர் எழுத்தாளர் இருக்கிறார். ஒரு வருடத்தில் நான்கு நாவல்களாவது எழுதிவிடுவார். அவர் தனக்கு ஒரு நாளில் இரண்டு நாட்கள் கிடைப்ப தாகச் சொல்கிறார். விடியும்போது அவர் எழுந்து காலை அலுவல்களை முடித்துவிட்டு ஐந்து மணி நேரம் கணி னியில் வேலை செய்வார். மதிய உணவுக்கு பின்னர் ஒரு குட்டித் தூக்கம். வழக்கமான நடை போய் வந்த பிறகு புத்துணர்ச்சி ஒன்று பிறக்கும். மறுபடியும் அமர்ந்து ஐந்து மணி நேரம் எழுதுவார். 'ஒரு நாளில் எனக்கு இரண்டு நாள்கள். பத்து மணிநேரம் எழுதுகிறேன்' என்பார்.

அதிகமாக உழைக்கும் ஒருவர் பெயரை தேடுபொறி யில் தேடியபோது எங்கள் எல்லோருக்கும் பரிச்சயமான எலான் மஸ்கின் பெயர்தான் வந்தது. இவர் தொழிற் சாலை ஆரம்பித்த காலத்தில் வீட்டுக்கே போனதில்லை. தரையிலே படுத்து உறங்கிவிடுவார். இரவு வேலையாட் கள் பிரச்சினைகள் கொண்டுவருவார்கள். இவர் உட னுக்குடன் தீர்த்துவைப்பாராம். ஒரு நாளில் இவர் தூங் குவது இரண்டு மணி நேரம் தானாம்.

எனக்கு தெரிந்த ஒருவர் அமெரிக்காவில் ஒரு பில்லி யனரை பார்க்கச் சென்றார். பில்லியன் என்றால் ஆயிரம் மில்லியன். இவரோ பல பில்லியன்களுக்கு சொந்தக் காரர். ஆறுமாத முயற்சிக்கு பின்னர் நண்பருக்கு ஐந்து நிமிடம் அவருடன் தனிய சந்திப்பதற்கு அவகாசம் கிடைத்திருந்தது. அவருடைய அலுவலக அறைக்குள் நுழைந்த நண்பர் திகைத்துவிட்டார். பில்லியனர் கணி னியில் நாலு திரைகளுக்கு முன் உட்கார்ந்திருந்தார். அவருடைய விரல்கள் விசைப்பலகையில் விளையாடிய படி இருந்தன. நண்பர் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை கொடுத்தார். அவர் புத்திக்கூர்மையான சில கேள்விகளை நண்பரிடம் கேட்டபோது அவர் விரல்கள் கம்புயூட்டர் விசைப்பலகையில் ஓடியபடியே இருந்தன.

ஐந்து நிமிடம் முடிந்ததும் நண்பர் எழுந்து விடைபெற் றுக் கொண்டு, நின்ற நிலையிலேயே ஒரு கேள்வி கேட் டார். எப்படி அவரால் ஒரே நேரத்தில் பல காரியங் களை ஆற்ற முடிகிறது. பில்லியனர் இப்படி பதில் சொன் னார்:

'ஒருநாளில் 24 மணிநேரம்தான். அதை நாங்கள் மாற் றமுடி யாது. ஆனால் ஒரு நிமிடத்தில் ஒரு வேலைதான் செய்யலாம் என்ற எண்ணத்தை மாற்றலாம். உங்களுடன் பேசிக்கொண்டே இரண்டு முக்கியமான வேலைகளை நான் முடித்துவிட்டேன். 5 நிமிடத்தில் 10 நிமிட வேலையை செய்கிறேன். எனக்கு ஒரு நாளில் 48 மணி நேரம் கிடைக்கிறது.'

(தமிழர் தகவல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** கடவுச்சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும்போது பெண்கள் நெற்றியில் பொட்டிடக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தை மேற்கோள்காட்டி, இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், ஈழத்தமிழர்களின் இன, மத அடையாளங் களை உறுதி செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் லைவருமான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளாராமே?



**வியுக்தியார் :** அந்தச் செய்தியைப் படித்தபோது பழைய சம்பவம் ஒன்றுதான் ஞாபகத்திற்கு வந்தது. அந் தக் காலத்தில் எம்.பி.மாரின் வீடுகளிலும் வேறு ஒரு சில முக்கிய அலுவலங்களிலும்தான் தொலைபேசிகள் இருக்கும். வெளி இடங்களுக்கு அழைப்பு எடுப்பதெனில் சிறிலங்கா ரெலிகொமின் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை அழைத்து 'புக்' பண்ணினால் நீண்ட காத்திருப்புக்கு பிறகுதான் அவர்கள் இணைப்பை கொடுப்பார்கள். காவலூர் எம்.பியாக இருந்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஏதோ ஒரு அரச அலுவலகத்தில் தமிழில் பெயர்பலகை இல்லை என்பதை முறையிடுவதற்காக அந்த துறை சார்ந்த அமைச்சரிடம் முறையிடுவதற்காக அவருக்கு அழைப்பெடுக்க 'புக்' பண்ணியிருந் தார். பரிவர்த்தனை நிலையத்தவர்களுக்கு இரவு 11 மணிக்கு பிறகுதான் அமைச்சரின் லைன் கிடைத்திருக் கின்றது. அவர்கள் இங்கே பண்டிதரிடம் கேட்க அவ ரும் இணைப்பைக் கொடுங்கள் என்றிருக்கிறார். நல்ல நித்திரையில் இருந்த அமைச்சரும் நள்ளிரவு ஏதேனும் அவசரமாகத்தானே இருக்கும் என்று அவருடன் கதைத் திருக்கிறார். அமைச்சருக்கோ கடும்கோபம். அந்த ராத்தியிலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து மறுநாளே தமிழிலும் பெயர்ப்பலகை போடவைத்தாராம். அந்த பண்டிதரின் வழிவந்தவர் தானே சிறிதரன். அதுதான் இப்படி ஒரு விடயமும் விடாமல் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார். அவர் கேட்டிருப்பதை குடியகல்வு திணைக்களம் ஏற்றுக்கொண்டால், நமது பெண்கள் வெளிநாடு போகும்போது பொட்டு (அது ஒட்டுப்பொட்டாகவும் இருக்கலாம்) மறக்காமல் எடுத்துச் செல்லவேண்டும். இல்லையேல் நெற்றியில் இருந்த அந்த அடையாளத்தை காணவில்லை என்று வெளிநாட்டு விமானநிலையங்களில் உள்ள அதிகாரிகள் இவர்களை உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். நமது இந்துக் குருமார் மறக்காமல் வீபூதியையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

---

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தங்களை இரகசியமாகப் பேணுவதன் நோக்கம் என்னவென முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட கேள்வி எழுப்பியுள்ள அதேவேளை, இந்தியாவுடன் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர ஒப்பந்தங்களை மீறாத வகையில் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுமானால், அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளதே.?

**வியுக்தியார்:** இரு கட்சிகளுமே இருவேறு துருவங்கள். இந்தியாவுடன் எண்பத்தியேழில் ஒப்பந்தம் செய்த கட்சி ஐக்கிய தேசியக்கட்சி. அந்த ஒப்பந்தைத் மூர்க்கத் தனமாக எதிர்த்தவர்கள் இன்றைய ஆட்சியாளர்களான ஜேவிபியினர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்திய ராணுவம் இலங்கையில் அமைதிப்படையாக வந்திருந்தபோது அந்த ராணுவத்தை எதிர்த்து ஆயுத ரீதியாகவும் ஜேவிபி போரிட்டபோது அதன் ராணுவ பிரிவுக்கு தலைமை தாங்கியவர் குமார் குணரட்ணம் என்ற ஜேவிபி இயக்கத்தவர். அவரே இப்போது முன் னிலை சேஷலிசக்கட்சியின் தலைவர். இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்த ஐ.தே.கவும் அதனை எதிர்த்த ஒன்றின் ஒரு அணியினரும் இப்படித்தானே சொல்வார்கள். ஆனால் அன்று இந்திய எதிர்ப்பாளர்களாக இருந்தாலும் இன்றைய ஆட்சியாளர்களான ஜேவிபியினர் இந்தியாவுடனான எந்த ஒப்பந்தத்திலும் எச்சரிக்கையாகவே இருப்பார்கள் என்பதால், இந்த ஒப்பந்தங்கள் குறித்து இரகசியமாக இருந்தாலும் நாட்டுக்கு தீங்கான விடயங்களில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்றே நம்பலாம்.




# வியுக்தியார் பதில்கள்

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** இலங்கைக்கு வழங்கிய கச்சதீவை மீளப்பெற வேண்டும் என்று கோரி தமிழ்நாடு சட்ட சபையில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தனிநபர் பிரேரணையை கடந்த புதன்கிழமை சமர்ப்பித்திருந்தார். "தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களை போக்கிடவும் கச்சதீவை மீண்டும் பெறுவதே நிரந்தர தீர்வாக அமையும்", என்று அந்த தீர்மானத்தில் தமிழக முதல்வர் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டுள்ளது போல தமிழக மீவர்களின் அனைத்து பிரச்னைகளும் கச்சதீவை இந்தியா மீட்டால் தீர்ந்துவிடும் என்று நினைக்கின்றீர்களா?




**வியுக்தியார்:** கச்சதீவை மீட்டால் பிரச்சினை தீருமா என்பது இருக்கட்டும். கச்சதீவை மீட்கக் கோரி தமிழகத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது இது முதல் தடவை அல்ல. இது ஐந்தாவது தடவை. முதல் முதலில் எழுபத்தி நான்கில் தற்போதைய முதல்வரின் தந்தை கலைஞர் கருணாநிதிதான் முதல் பிரேரணையை கொண்டு வந்தார். கச்சதீவை இலங்கைக்கு வழங்கும் முடிவை அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி எடுத்தபோது கலைஞர் கருணாநிதி, 'கச்சதீவு முடிந்துபோன விவகாரம். ஆனாலும் நாங்கள் வெளியே இருந்து அதனை எதிர்த்துக்கொண்டே இருப்போம். நீங்கள் கண்டுகொள்ளாதீர்கள்" என்று இந்திராவிடம் கூறியதாகவும் தமிழகத்தில் விமர்சகர்கள் கூறுவதுண்டு. ஆனால் கச்சதீவை இந்தியா இலங்கைக்கு வழங்கியபோது, தமிழக மீனவர்கள் கச்சதீவுவரை வந்து மீன்பிடித்தபோது இருந்த நிலமைக்கும் இன்றைய நிலமைக்கும் பல வித்தியாசங்கள். இன்று கச்சதீவுக்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட இந்திய கடல்பரப்பில் இழுவை மடி மீன்பிடியால் முற்றாக மீன்வளம் இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் இந்திய மீனவர்கள் இழுவைமடி மீன்பிடிக்காக கச்சதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்பகுதிக்கு வருகின்றார்கள். அதிகம் என் அவர்கள் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை வரை வந்து போகின்றார்கள். பிரச்சினையே மீன் பிடிப்பதில் இல்லை. மீன்பிடிக்கும் முறையில்தான் பிரச்சினை. நமது அமைச்சர் சந்திரசேகர் கூறியிருப்பதுபோல தமிழக அரசியல்வாதிகள் கச்சதீவை வாக்குவங்கிக்காத்தான் பயன்படுத்துகின்றார்கள்.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமற்றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளித்தால் தேவையில்லாத முரண்பாடுகள் தோற்றம் பெறும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ள அதேவேளையில், உள்ளூராட்சித் தேர்தல் இடம் பெற்றால் ஆறு மாதத்துக்குள் இலங்கை மூன்று தேர்தல்களை சந்தித்திருக்கும் என்பதால் மாகாணசபை தேர்தல் இந்த வருடம் சாத்தியமில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளாரே.



**வியுக்தியார்:** அரசமைப்பின் 13வது திருத்தம் என்பதே, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் செய்யப்பட்டதுதான். அதுபற்றி இந்தியாவுடன் பேசக் கூடாது என்பது, அவர்களின் அரசியல் அறிவை வெளிப்படுத்துவது. அதனால்தான் முடிந்தால் 13வது திருத்தத்தை ரத்துச்செய்து காட்டுங்கள் என்று மகிந்த ஆட்சியில் இருந்தபோது ஒருதடவை ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்திருந்தார். அவர்கள் தமது அரசியலை மீண்டும் துாக்கிநிமிர்த்த இதுபோன்ற கதைகளை கதைக்கத்தான் செய்வார்கள். ஆனால் இந்த ஆண்டில் மாகாண சபைக்கான தேர்தல்களை கட்டாயம் நடத்துவோம் என்று திரும்பத்திரும்பக் கூறிவந்த அரசாங்கம் இப்போது இந்த ஆண்டில் நடக்காது என்று கூறியிருப்பதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆறு மாதங்களில் மூன்று தேர்தல்கள் நடந்துவிட்ட நிலையில் இன்னுமொரு தேர்தல் நடாத்தமுடியாது என்பது சரியான காரணமாக இருக்கவும் முடியாது. இதனை தெரிந்துகொண்டுதானே இவ்வளவு நாட்களாக கட்டாயம் நடக்கும் என்று கூறிக்கொண்டிருந்தார்கள். எனவே இந்த ஆண்டு நடக்காது என்றால், அதுதான் புரிந்து கொள்ள முடியவில்லை.

---

**செல்வா கேசவன்**
**சாங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது, கைச்சாத்திடப்படவுள்ள இந்திய - இலங்கை இராணுவ ஒப்பந்தம் இலங்கையை உலகப்போரில் தள்ளும் என்று மக்கள் போராட்ட முன்னணியின் நிர்வாக உறுப்பினர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளாரே. அத்தனை முக்கியமான ஒப்பந்தம் ஒன்றா கைச்சாத்திடப்படவிருக்கின்றது?.



வியுக்தியார்: அரசாங்கம் இந்தியாவுடன் செய்யவிருக்கும் ஒப்பந்தம் குறித்து அமைச்சரவைக்கு கூட சொல்லப்படவில்லை என்றும் சில எதிர்க்கட்சியினர் கூறியிருக்கின்றார்களே. அதாவது ஒப்பந்தம் குறித்து பகிரங்கப்படுத்தவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறிக்கொண்டிருக்க, முன்னாள் அரகல போராட்ட வீரரோ, ஒப்பந்தத்தின் மூலம் உலகப்போர் மூழும் என்கிறார். அப்படியெனில் அந்த ஒப்பந்தம் குறித்து இவருக்கு எப்படி தெரியவந்தது என்பதையும் அல்லவா இவர் சொல்லவேண்டும்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** 'முன்பெல்லாம் வாரத்தில் ஓரிரு நாட்களில் மட்டுமே இந்திய மீனவர்கள் வருவார்கள். இடைப்பட்ட நாட்களில் எமது வாழ்வாதாரத்தை தேடிக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. இப்பொழுது அதற்குக் கூட வழியில்லாமல் உணவுக்காக கூட நாம் கஷ்டப்படுகிறோம் என நெடுந்தீவு மீனவர்கள் முறையிட்டுள்ளனர். எனவே இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தரப்பிடம் எமது மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து தீர்வு காண்பதற்கான அழுத்தம் கொடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளேன்" - என்று நமது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளாரே?.

வியுக்தியார்: ஆமாம் நானும் அந்தச் செய்தியைப் பார்தேன். அவர் நெடுந்தீவில் தேர்தல் பிரசாரம் செய்தபோது இதனைக் கூறியிருக்கிறார். அவர் தான் சொல்வதை நெடுந்தீவு மக்கள் நம்புவார்கள் என்று நினைத்துக்கொண்டு அதனைக் கூறியிருப்பாரோ தெரியவில்லை. கட்சிக்குள் காணப்படும் பிரச்னைகளுக்கு கூட அழுத்தம்கொடுத்து தீர்வுகாண முடியாத அவர், இந்தியத்தரப்பிடம் அழுத்தம்கொடுக்கப் போகிறாராம். அதுமட்டுமல்ல, புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் மேலும் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரங்களை அழிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்கின்றது என்று புதிய அரசாங்கத்தின்மீதும் குற்றம் சுமத்தியிருக்கிறார் சிறிதரன். இதன்மூலம் அவர், மறைமுகமாக டக்ளஸ் தேவானந்தாவிற்கு தான் நெடுந்தீவில் பிரசாரம் செய்திருக்கிறார். அவர் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தபோது தமிழக மீனவர்களை கட்டுப்படுத்தியதாகவும் புதிய அரசு கட்டுப்படுத்துவதில்லை என்றும் கூறுகிறாரோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு போரால் உருக்குலையும் மியன்மாரில் நிலநடுக்க கோரம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இராணுவ ஆட்சியில் உள்ள மியான்மரில் உள்நாட்டு போரும் நீண்ட காலமாக நடந்து வருகிறது. தற்போது அங்கு நடந்த நில நடுக்கத்தின் காரணமாக முழு நாடே நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

முன்னைய பர்மாவான தற்போதய மியான்மாரில் ஆளும் ராணுவ அரசாங்கத்துக்கு எதிராக பல்லின கிளர்ச்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். இதனால் போரால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் மக்களை தற்போது நிலநடுக்கம் மேலும் பாரிய இன்னலுக்கு தள்ளி உள்ளது.

இயற்கையின் சீற்றத்தை சீர் செய்யும் வகையில், ராணுவ அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் மியான்மரின் ஆயுதப் பிரிவான மக்கள் பாதுகாப்புப்படை, இரு வார கால போர் நிறுத்தத்தை அறிவித்து உள்ளது.

மேலும் நிலநடுக்க மீட்புப் பணிகளை எளிதாக்கும் வகையில் சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. தாங்கள் கட்டுப்படுத்தும் பகுதிகளில் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் தற்காலிக மீட்பு மற்றும் மருத்துவ முகாம்களை நிறுவுவதை உறுதி செய்ய ஐ.நா. மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் ஒத்துழைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

மியான்மர் ஒரு பல்லின நாடு. மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் பெரும்பான்மையின பௌத்த மக்கள் ஆவர். மீதமுள்ள மக்கள் மங்கோலிய, திபெத்திய-பர்மிய, தாய், மோன்-கெமர் மொழிகளைப் பேசுகின்றனர்.

காலனித்துவ ஆட்சியின் போது, பிரித்தாளும் தந்திரமாக பிரிட்டிஷ், பர்மாவில் பல தேசிய சிறுபான்மையினராக இருந்த மக்கள் இடையே முரண்பாடுகளை உருவாக்கி ஆங்கிலேயர்களால் ஆழ முடிந்தது.

காலனி ஆட்சியில் பர்மாவின் சுய நிர்ணய இறையாண்மையை பிரகடனப்படுத்துவது தேசிய சிறுபான்மையினர் தங்கள் தேசிய சுதந்திரத்திற்கான வாய்ப்பாக உணரப்பட்டது. அத்துடன் பிரிவினைவாத உணர்வுகள் பிரிட்டிஷாரால் தீவிரமாக தூண்டப்பட்டன. அவர்கள் காலனித்துவ நிர்வாகம் வெளியேறுவதற்கு முன்பு பல பர்மிய மாநிலங்களுக்கு சுதந்திரம் அளிப்பதாக உறுதியளித்தனர்.

அக்காலத்திலேயே மத்திய அரசுக்கு எதிர்ப்பு மையம் ஒன்று பர்மாவின் தென் கிழக்கில், கரேன் மாநிலத்தில் எழுந்தது. இந்த பிரதேசத்தின் முக்கிய மக்கள் கரேன் மக்கள், அல்லது திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தின் கரேன் கிளையைச் சேர்ந்த தேசியங்கள் மற்றும் பழங்குடியினர் வாழ்ந்தனர்.

2021 மியான்மர் இராணுவப் புரட்சியின் பின்னர், ஆளும் சர்வாதிகார இராணுவ ஆட்சிக் குழுவிற்கு எதிராக மியான்மர் மக்களின் பல ஆயுதக் குழுக்கள் போராடி வருகின்றன.

தொடரும் இக் கொடிய போரில் டிசம்பர் 2024 வரை 80000 மேலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 30,00,000 வரை வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ளனர். மேலும் 1,13,700 மக்கள் உள்நாட்டில் புலம்பெயர்ந்துள்ளனர்.

2020 மியான்மர் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஆங் சான் சூச்சி தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சி மிகப் பெரும்பான்மையான (83 வீத) தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இந்த தேர்தலில் முறைகேடுகள் செய்து ஆங் சான் சூச்சி தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாய முன்னணி கட்சி வெற்றி பெற்றது செல்லாது என மியான்மர் இராணுவம் குற்றம் சாட்டியதுடன், 1 பிப்ரவரி 2021 அன்று இராணுவப் புரட்சி மூலம் அரசை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது.


நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்தியும், நாடாளுமன்றத்தை முடக்கியும், ஆங் சான் சூச்சியை வீட்டுக் காவலில் வைத்தனர். இதனால் நாடு முழுவதும் மியான்மர் இராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டங்களும், வன்முறைகளும் எழுச்சி பெற்றது.

இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களால் மார்ச் 2023வரை எல்லைப்புற மாநிலங்களில் வாழும் 17.5 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவை என்றும், 1.6 மில்லியன் பொது மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர் என்றும் 55,000 குடியிருப்புகள் குண்டு வீச்சுகளால் அழிந்துள்ளது என ஐ. நா. மதிப்பீடு செய்துள்ளது.

மியான்மரிலிருந்து 40,000 பேர் அண்டை நாடுகளான வங்காளதேசம், இந்தியா, தாய்லாந்து போன்ற அண்டை நாடுகளில் மக்கள் அடைக்கலம் அடைந்துள்ளனர்.

அக்டோபர் 2023 வரை மியான்மரின் 40 வீத நிலம் அரசு கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் மூன்றில் இரண்டு பங்கு 330 உள்ளாட்சிகள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது






நீண்ட காலமாக தொடரும் உள்நாட்டு யுத்தத்தின் விளைவால் பாதிக்கப்பட்ட மக்களை தற்போதைய நிலநடுக்க இயற்கை அனர்த்தமும் வெகுவாக பாதித்துள்ளது.

மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 10 ஆயிரம் கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமானதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 28ம் தேதி சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக மியான்மர் கடும் பாதிப்பை சந்தித்தது. இந்த நிலநடுக்கத்தால் ஏராளமான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகின. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் சர்வதேச நாடுகள் உதவி செய்து வருகின்றன.

நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 3000 மேலான பொதுமக்கள் உயிரிழந்து உள்ளதாகவும், பத்து ஆயிரம் பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும், ஆயிரக்கணக்கானோர் காணாமல் போனதாகவும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இடிந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் பெரும்பாலான கட்டிடங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு இடங்களில் கனரக எந்திரங்கள் இல்லாததால் மீட்புப்பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மியான்மரில் நிலநடுக்கத்தால் தண்ணீர் விநியோகம், சுகாதார உள்கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

சுவாச தொற்றுகள், தோல் நோய்கள், டெங்கு காய்ச்சல் போன்ற நோய்க் கிருமிகளால் பரவும் நோய்கள், தட்டம்மை போன்ற தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்கள் ஆகியவற்றுக்கான பாதிப்பு அதிகரித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியான்மர் நிலநடுக்கத்தின் போது, தொழுகையில் ஈடுபட்டிருந்த பலர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதி கூடிய ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் மியான்மரில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலநடுக்கம், மியான்மர் தலைநகர் நய்பிடாவ், மண்டாலே நகரங்களில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

நிலநடுக்கத்தால் பல ஆயிரம் பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. அமெரிக்க புவியியல் ஆய்வு அமைப்பு, பலி எண்ணிக்கை பல மடங்கு உயரும் என, கணித்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட போது அப்போது நாடு முழுவதும் பல்வேறு மசூதிகளில் வெள்ளிக் கிழமை தொழுகை நடந்தது. தொழுகையில் ஈடுபட்டு இருந்த 700 பேர் உயிரிழந்தனர். பழைய காலத்தில் கட்டப்பட்ட பெரும்பாலான பல மசூதிகள் மிகவும் சேதம் அடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசியை குறைந்த இலாபத்தில் கொள்வனவு செய்ய தயாரில்லை

## அரிசி ஆலை உரிமையாளர் சங்க தலைவர் அதிருப்தி



வவுனியா, ஏப். 06

அரிசி ஆலைகளில் நாட்டுக்குத் தேவையான அரிசி உள்ள போதும் வர்த்தகர்கள் குறைந்த இலாபத்தில் அதனைக் கொள்வனவு செய்து விற்பதற்குத் தயாராக இல்லை என வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் சி. விவேகானந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்

"சிறுபோக நெல் வரும் வரை மக்களுக்குத் தேவையான அரிசியை வழங்குவதற்கு போதியளவு நெல் கையிருப்பில் உள்ளது. அரிசி ஆலைகளிலும், பொருளாதாரம் உள்ள தனியாரும் கொள்வனவு செய்து வைத்துள்ள நெல்லும் உள்ளது. அதிகூடிய விலையில் விற்பதற்காக அவர்கள் பதுக்கி வைத்துள்ளனர். அரிசி ஆலை உரிமையாளர்களைப் பொறுத்த வரை அரச கட்டளைக்கு உடன்பட்டு அரசின் விலை நிர்ணயத்துக்கு கொடுப்பதற்கு தாராளமாக அரிசி உள்ளது. ஆனால் அரிசிக்கு தட்டுப்பாடு என்று கூறி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் போகின்றார்கள்.

எல்லா இடங்களிலும் உள்ள நெல்லை கணக்கெடுத்து சந்தைப் படுத்துவதற்குரிய உதவியையும் அதற்குரிய பொறிமுறையையும் செய்ய வேண்டும். எம்மிடம் தற்போது போதிய அரிசி இருக்கிறது. வாக்குவதற்கு வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தயாரில்லை.

முன்னைய காலத்தில் ஒரு கிலோ அரிசிக்கு 20, 30 ரூபாய் இலாபம் வைத்து விற்பனை செய்த சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள் தற்போது அரசாங்கத்தால் கூறப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் இருந்து 5 ரூபாய் குறைத்து வழங்குமாறு கூறப்பட்டதற்கு இணங்க நாம் விநியோகிக்கின்ற போது அவர்கள் இலாபம் போதாது என கொள்வனவு செய்கிறார்கள் இல்லை. வெள்ளை நாடு 230 ரூபாய் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட விலை. நாங்கள் 225 ரூபாய்க்கு கொடுக்க தயாராக இருக்கின்றோம். சிவப்பு நாடு 230 ரூபாய். அதையும் 225 ரூபாய்க்கு கொடுக்க தயார். அதை வாங்க முதலாளிமாரும் இல்லை. வர்த்தக நிலையம், சதொச, கூட்டுறவுச் சங்கம் என எவையும் இல்லை.

ஆனால் அரிசி இல்லை. அரிசி தட்டுப்பாடு எனக் கூறுகிறார்கள். வங்கியில் கடன் வாங்கி நெல் கொள்வனவு செய்தோம். அந்தக் கடனை 6 மாதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். அதனால் அரிசியை விற்க வேண்டும். அடுத்த சிறுபோக நெல் வருகிறது. இதை விற்றால் தான் சிறுபோக நெல்லை கொள்வனவு செய்ய முடியும். இதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு இல்லை. குளங்களில் நிறைய தண்ணீர் இருக்கிறது. சிறுபோக நெல் வந்தால் இந்த வருடம் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது - என்றார். (எ-10)

# கடந்தகாலத்தை கையாளவேண்டியது...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய ஆணைக்குழுக்களின் விதப்புரைகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழு அதன் அறிக்கை யில் குறிப்பிட்டதைப் போன்று 'எமது நாடு மிதமிஞ்சிய ஆணைக்குழுக்களைக் கண்டிருக்கிறது. இந்த ஆணைக்குழுக்க ளின் முன்னிலையில் சாட்சியம் அளித்த வர்களில் பெரும்பாலானவர்கள் ஆணைக் குழுக்களின் முன்னால் செல்வதனால் எந்தப் பயனையும் அடையப்போவ தில்லை என்றும் வெறுமனே ஏமாற்றமே மிஞ்சும் என்றும் தங்கள் அதிருப்தியை வெளியிட்டார்கள்.'

முன்னைய அரசாங்கங்கள் தயாரித்த ஆனால், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் காத உத்தேச உண்மை மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழு சட்டம் தொடர் பாக ஒரு விரிவான விமர்சனத்தை முன் னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எழுதியிருக்கிறார். நன்றாக அறியப்பட்டதும் உலகில் பெருமளவுக்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்ட தென்னாபிரிக்க உண்மை மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழுவின் அனுபவங்களை தனது விமர்சனத்தில் பேராசிரியர் பீரிஸ் விளக்கிக் கூறியிருக்கிறார். இலங்கைச் சட்டம் பிரேரிப்பதைப் போன்று நாட்டின் சில பாகங்களை மாத்திரமல்ல, தென்னாபிரிக்க ஆணைக்குழு நாடு முழு வதையும் உள்ளடக்கியதாக ஆணையைக் கொண்டிருந்தது என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்.

இலங்கையிலும் வெறுமனே வடக்கு, கிழக்கை மாத்திரம் உள்ளடக்கியதாக அல்லாமல், நாடு முழுவதையும் தழுவிய தாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று அவசியமாகிறது. பட்டலந்த பிரச்னை மீண்டும் வெளிக் கிளம்பியிருப்பது இதை தெளிவாக உணர்த்துகிறது. படுமோசமான மனித உரிமைமீறல்கள் இலங்கையின் சகல பாகங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும் உள்ளவர்கள் மாத்திரமல்ல, சகல இன, மத சமூகங்க ளும் இந்த உரிமைமீறல்களினால் பாதிக்கப்பட்டிருந்தன.

எதிர்காலத்தைப் பற்றிய பரஸ்பர இணக்கப்பாட்டுடன் கூடிய 'முறைமை மாற்றம்' ஒன்றின் பின்புலத்தில் மாத்தி ரமே கடந்த காலத்தைக் கையாளுவது வெற்றாகரமானதாக அமையமுடியும். இது எந்தளவுக்கு தாமதிக்கப்படுகிறதோ, அந்தளவுக்கு தீர்வு மீதான அரசாங்கத்தின் பற்றுறுதி குறித்து உரிமைமீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியிலும் பரந்தளவில் மக்கள் மத்தியிலும் சந்தே கம் அதிகரிக்கும். தளர்வுறாத - நீண்ட தொரு கலந்தாலோசனைச் செயன்முறை யின் ஊடாக தேசிய கருத்தொருமிப் பைக் கட்டியெழுப்புவதை நோக்கிய பெரிய அரசியல் செயன்முறை ஒன்றின் அங்கமாக அமைந்திருந்ததே தென்னாபி ரிக்க ஆணைக்குழுவின் மிகவும் முக்கிய மான அம்சமாகும்.

இனக் குழுமங்களுக்கு இடையில் அதிகாரப் பகிர்வையும் சகல தரப்புகளி னதும் மனக்குறைகளையும் வடுக்களை யும் குணப்படுத்துவதற்கு வசதிசெய்யக் கூடிய பொறுப்புக்கூறல் நடவடிக்கைக ளையும் உள்ளடக்கிய அகல்விரிவான அரசியல் இணக்கத்தீர்வு ஒன்றே தென்னா பிரிக்க நல்லிணக்கச் செயன்முறையின் இறுதியான இலக்காக இருந்தது. இலங்கை மெய்யான நல்லிணக்கத்தை அடைய வேண்டுமானால், இந்த அனுபவங்களில் இருந்து முறையான படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டு, நிலைபேறான தேசிய ஐக்கியத்தை வளர்க்கக்கூடிய ஒரு முறையில் கடந்தகால அநீதிகளைக் கையாளுவதற்கு தீர்க்கமான நடவடிக்கைளை எடுக்க வேண்டியது இன்றியமையாததாகும். அரசாங்கமும் எதிர்க்கட்சியும் மக்களும் உண்மை, நீதியிலும் சகல சமூகங்களையும் அரவணைப்பதிலும் பற்றுறுதி கொண்டிருந்தால் ஒரு சமாதான இலங்கை சாத்தியமாகும்.

# இந்தியப் பிரதமர் மோடியின்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதவிர, கைது செய்யப்படும் மீனவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பயணத்தின்போது இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தி, இந்த விவகாரத்திற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தமிழ்நாட்டில் நிலவுகிறது. ஆனால், தமிழக மீனவர்கள் தங்கள் பகுதி கடற்கரை வரை வந்து மீன் பிடிப்பதாக இலங்கையின் வட பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது அவ்வளவு எளிதாக இருக்காது.

மேலும், பிரதமர் இலங்கைக்குச் செல்வதற்கு இரு நாட்களுக்கு முன்பாக கச்சத்தீவை இலங்கையிடம் இருந்து மீட்பதே மீனவர் பிரச்னைக்குத் தீர்வு என தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமும் இலங்கை வட்டாரத்தில் கவனிக்கப்படும்.

இந்த விவகாரங்கள் பற்றி வெளிப்படையாகப் பேச வாய்ப்புகள் குறைவு என்கிறார் கோபாலப்பிள்ளை அமிர்தலிங்கம். 'இந்த விவகாரங்களைப் பற்றி ராஜதந்திர ரீதியிலான அறிக்கைகளில் குறிப்பிடலாம். இலங்கைத் தமிழர் விவகாரங்களைப் பொறுத்தவரை, 13வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுங்கள், மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்துங்கள் என வலியுறுத்தியதாகச் சொல்லலாம். அதற்கு மேல் இந்த விவகாரங்களில் வேறு எதற்கும் வாய்ப்பில்லை" என்கிறார் அவர்.

இந்தக் கருத்தையே எதிரொலிக்கிறார் சென்னை லயோலா கல்லூரியின் பேராசிரியரான கிளாட்சன் சேவியர். 'இந்தப் பயணம் முழுக்க முழுக்க நல்லிணக்கத்திற்கான பயணம்தான். ஆகவே, சர்ச்சைக்குரிய விஷயங்கள் எதுவும் பேசப்படமாட்டாது. இந்தியாவை பொறுத்தவரை, இலங்கை பிராந்திய ரீதியில் மிக முக்கியமான நாடு. இலங்கையிலும் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானது. ஆகவே, சர்ச்சைக்குரிய விஷயங்கள் எதையும் இப்போது பேச மாட்டார்கள். இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால அபிலாஷைகள் குறித்துப் பேசுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு" என்கிறார் அவர்.

ஆனால், இலங்கை அரசுடன் இலங்கைத் தமிழர் நலன் சார்ந்து இந்தியா பேச வேண்டிய சில முக்கிய விஷயங்கள் இருக்கின்றன என்கிறார் கிளாட்ஸன் சேவியர்.

'உள்நாட்டுப் போரின்போது இடம்பெயர்ந்து இந்தியாவுக்கு வந்த 19,000 குடும்பங்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களில் பலர் இங்கேயே பிறந்து, இங்கேயே படித்தவர்கள். ஆனால், இங்கே அளிக்கப்படும் பல்கலைக் கழகப் பட்டங்களை இலங்கையில் பெரும்பாலும் அங்கீகரிப்பதில்லை. அதை அங்கீகரிக்க வேண்டும் என இந்தியா தரப்பு பேசவேண்டும். இவை தவிர, இந்தியா, இலங்கைக்கு பொருளாதார ரீதியாக நிறைய கடனுதவிகளைச் செய்துள்ளது. கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இது தவிர, சமூக ரீதியிலும் ஏதாவது செய்ய வேண்டும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ஐரோப்பாவுக்கென மிகப்பெரிய திட்டத்தை வகுத்து, அமெரிக்கா செயல்படுத்தியது. அதைப் போன்ற ஒரு திட்டத்தை இந்தியாவும் வகுக்க வேண்டும்' என்கிறார் அவர்.

ஆனால், அதிகாரிகள் மட்டத்திலேயே விரிவான முதல் கட்ட பேச்சுவார்த்தைகள் தேவைப்படும் இது போன்ற விவகாரங்களை இந்தக் குறுகிய பயணத்தில் விவாதிப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. (பிபிசி)

# தெளிவின் திறவு...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதெல்லாம் பல இளைஞர்களின் போக்கு சரியில்லை. விசித்திரமாக நடந்துகொள்கிறார்கள். மணமகனின் வீட்டாரைப் பொருத்தவரை மணமகளின் அழகு, ஊதியம், வசதி ஆகியவை முக்கியம். வீட்டுக்கு ஒரே பெண்ணாக இருந்தால் மிக்க மகிழ்ச்சி. அத்தனை சொத்தும் சிந்தாமல், சிதறாமல் மகனுக்கு வந்துவிட வேண்டும். மனப் பொருத்தம் இல்லாத திருமணம் சிதைந்து போகிறது. காதல் மணம் புரிந்து கொள்பவர்கள் மிகவும் அவசரப்பட்டு விடுகிறார்கள்.

ஒருவருக்கு, மற்றவரின் உண்மையான குணம், குடும்பப் பின்னணி ஆகியவை தெரிய வருவதற்குள் எல்லாம் முடிந்து போகிறது. பெற்றவர்களால் சரியான முடிவை எடுக்க முடியாது என்ற காரணத்தினால் பெண் பார்க்கவும், மாப்பிள்ளை பார்க்கவும் நெருங்கிய சுற்றத்தை அழைத்துச் செல்கிறார்கள். அவர்களின் கணிப்பு சரியாக இருக்கும். தற்போது உடன் வருபவர்கள் எந்தக் கருத்தையும் சொல்வதில்லை. நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை. விதியின் பிழை என்று எடுத்துக் கொள்ள வேண்டியதாகிறது. பொட்டு, வளையல் போன்றவற்றை வாங்க பொறுமையாகத் தேடுபவர்கள், வாழ்க்கைத் துணை தேர்வில் தவறான முடிவை எடுத்து விடுகிறார்கள்.

அடுத்து, நமக்கென தேசியக் கடமையும் உண்டு. மக்களாட்சி முறையில் நம்மை ஆட்சி செய்பவர்களை நாம் தேர்வு செய்கிறோம். மிக முக்கியமான இந்த ஜனநாயகக் கடமையை முறைப்படி ஆற்றத் தவறுபவர்கள் வெட்கப்பட வேண்டும். கடமையைச் செய்யாமல், உரிமையைக் கோர என்ன தகுதி அவர்களுக்கு இருக்கிறது? நம் வாக்கை யாருக்கு அளிப்பது என்பது தனிநபர் முடிவு. குழு முடிவும் உண்டு. ஒரு கட்சியின் உறுப்பினராக இருப்பவர்கள் அந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருப்பார்கள்.

ஒரு கட்சி தன் பதவிக் காலத்தில் என்னென்ன நலத் திட்டங்களை நிறைவேற்றியது, நேர்மையான ஆட்சி இருந்ததா, தடாலடி அரசியலா, தார்மிக அரசியலா, தனிமனித சுதந்திரம் இருந்ததா, நமது பகுதி எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்தது, விவசாயிகளுக்கு நன்மை செய்தார்களா, செய்வார்களா, தொழில்முனைவோரின் பாதுகாப்பு, காவல் துறையின் கண்ணியம், கல்விக்கூடங்களின் உள்கட்டமைப்பு, சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், நகரத் தூய்மை, சட்டம்-ஒழுங்கு நிலைமை் பெண்கள் பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும். ஐந்து ஆண்டுகள் நம் வாழ்க்கையை அவர்களிடம் ஒப்படைக்கிறோம் என்பதைக் கருத்தில் கொண்டு, உள்ளதில் நல்லதுக்கு வாக்களிப்போம்.

எது எப்படி நடக்க வேண்டுமோ. அது அப்படித் தான் நடக்கும். சுனிதா வில்லியம்ஸ், வில்பர் ஆகியோர் எட்டு நாள்கள் மட்டுமே விண்வெளியில் இருப்பதற்காக அனுப்பப்பட்டார்கள். ஆனால், அவர்கள் 286 நாள்கள் இருக்கும்படி ஆகிவிட்டது. அதேசமயம் விதியின் மீது பழியைப் போடாமல், நம் மதியையும் உபயோகித்து எந்த ஒரு முடிவையும் எடுத்தால், குற்ற உணர்ச்சியில் தவிக்க மாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கட்சி...

தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போதே இந்திய - இலங்கை நட்புறவை வலுவாக்குவதற்கான எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் தனிப்பட்ட அர்ப்பணிப்பும் பங்களிப்பும் பாராட்டுக்குரியவை என இந்திய பிரதமர் குறிப்பிட்டார். (ஐ)

## எட்கா...

உடன்படிக்கையை அரசாங் கம் இறுதி செய்யவேண்டும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிர சிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார். இதன் போது, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இலங்கை அமெரிக்காவின் புதிய வரிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையை இறுதி செய்வது அவசியம்.

சிங்கப்பூர், தாய்லாந்துடன் செய்து கொண்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை செயல்படுத்த ஆரம்பிக்கவேண்டும். எட்கா உடன்படிக்கையை இறுதி செய்யவேண்டும். இந்த ஆண்டு நிறைவடைய முன்னர் அதனை இறுதி செய்யவேண்டும் என்பதே எனது எண்ணம் - நாங்கள் அதனை முன்னெடுக்க வேண்டும்.

ஐரோப்பாவுடன் என்ன நடக்கும் என்பது தெரியாது. இதன் காரணமாக எட்கா உடன்படிக்கையை முதலில் பூர்த்தி செய்யவேண்டும். இந்த வருடத்தில் கைச்சாத்திடவேண்டும். புதிய வர்த்தக கொள்கை அவசியம். ஏற்கனவே, உள்ளதை கைவிடாமல் புதிய திசைகள் குறித்து ஆராய வேண்டும். புதிய பொருட்கள் அவசியம் - ஆடைகளை மாத்திரம் நம்பியிருக்க முடியாது - என்றார். (ஐ)

## 3 புதிய...

சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத் தைக் கட்டுப்படுத்தக்கூடிய தம்புள்ளை விவசாய களஞ்சிய கட்டட தொகுதி ஆகிய திட்டங்களே இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த மூன்று திட்டங்களையும் கொழும்பில் இருந்தவாறே மெய்நிகர் வழியே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

சம்பூர் சூரிய மின் நிலையத் திட்டம் இரண்டு கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டம் 2027இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்துக்காக 500 ஏக்கர் பரப்பளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 50 மெகாவாட் மின்சாரம் நாட்டின் தேசிய மின்சார விநியோகத்தில் இணைக்கப்படும்.

5 ஆயிரம் மெற்றிக் தொன் கொள்ளளவும், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டதாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ள தம்புள்ளை விவசாய களஞ்சியம் (குளிர் கிடங்கு) நேற்று திறந்து வைக்கப்பட்டது. 54.4 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த களஞ்சியத்துக்கு இந்திய் அரசாங்கம் 30 கோடி ரூபாயை நன்கொடையாக வழங்கியிருந்தது.

5 ஆயிரம் மதத்தலங்களின் கூரைகளில் சூரிய மின் கலங்களை நிறுவும் திட்டம் நாடு முழுவதும் உள்ளடக்கியதாகவும் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. (ஐ)

## படகுகளுடன்...

தரப்பு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி பணிமனையில் நடைபெற்றன. இதன் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மீனவர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் நாம் முன்னேற வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறோம். அந்த வகையில் இந்திய மீனவர்களை உடனடியாக விடுவித்து, அவர்களின் படகுகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் - என்றும் கூறினார். (ஐ)

## இந்திய..

கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றைய தினம் ஜனாதிபதி பணிமனையில் நடைபெற்றது. இதன் பின்னர் இந்திய பிரதமருக்கு இந்த விருதை ஜனாதிபதி அநுர வழங்கிக் கௌரவித்தார்.

விருதை ஏற்றுக் கொண்ட இந்திய பிரதமர்,

"இந்தப் பெருமை எனக்கு மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களுக்கும் கிடைத்த பெருமையாகும். இது இந்திய. இலங்கை மக்களுக்கு இடையிலான வரலாற்று உறவுகள் மற்றும் ஆழமான நட்புக்கு கிடைத்த மரியாதையாகும்" - என்று கூறினார்.

**பதக்கத்தின் சிறப்புகள்**

இந்திய பிரதமருக்கு வழங்கப்பட்ட விருதில்,

தர்மசக்கரம் இரு நாடுகளின் கலாசார மரபுகளை வடிவமைத்த பகிரப்பட்ட பௌத்த பாரம்பரியத்தை குறிக்கிறது. அரிசி கதிர்களால் அலங்கரிக்கப்பட்ட பானையான புன் கலசம், செழிப்பு மற்றும் புதுப்பித்தலை குறிக்கிறது.

பதிக்கப்பட்டுள்ள நவரத்தினங்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீடித்த நட்பைக் குறிக்கிறது. இது தூய தாமரை இதழ்களால் சூழப்பட்ட ஒரு பூகோளத்துக்குள் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சூரியனும் சந்திரனும் இந்த உறவின் காலமற்ற தன்மையை மேலும் பிரதிபலிக்கின்றன. இது பண்டைய வரலாற்றிலிருந்து எல்லையற்ற எதிர்காலம் வரை நீண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றன. (ஐ)

## சந்திரிகா...

ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் நட்சத்திர விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இலங்கை மீது அமெரிக்கா விதித்துள்ள 44 சதவீத வரி குறித்தும் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துமே இதன் போது விவாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பெரும்பான்மை...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் - புலிபாய்ந்தகல் பகுதியில் தமிழ் மீனவர்கள் தொடர்ச்சியாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பகுதியில் அடிக்கடி பெரும்பான்மையின மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருவது வழமை. இந்த நாட்களில் அடாத்தாக வாடிகளையும் அவர்கள் அமைப்பதுண்டு.

இந்த நிலையில், அண்மையில் அத்துமீறிய பெரும்பான்மையின மீனவர்கள் தமிழரின் வாடிகளை அகற்றிவிட்டு, தாம் வாடிகளை அமைத்து தொழில் செய்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. இந்த வாடிகளை அமைப்பதற்கு அவர்கள் உரிய அனுமதி எதையும் பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, தென்னிலங்கை மீனவர் அத்துமீறி வாடி அமைத்துள்ள பகுதிகளை பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் சென்று பார்வையிட்டது டன், இது தொடர்பில்நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவி பணிப்பாளரையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## தமிழர்கள் சமத்துவமாக...

கொழும்பில் நடைபெற்றது. சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்த சந்திப்பில் ஒவ்வொரு கட்சி சார்பிலும் ஒரு பிரதிநிதி இந்திய பிரதமருக்கு விடயங்களை எடுத்துரைத்தனர்.

இரா. சம்பந்தன், மாவை சேனதிராசா தலைமையில் தமிழ் கட்சிகளை பல முறை சந்தித்து பேசியுள்ளேன். அப்போது வந்தவர்கள் பலரும் இப்போதும் வந்துள்ளீர்கள். இரு தலைவர்களுக்கும் எனது அஞ்சலிகள். சம்பந்தன் தலைமையில் முன்னர் ஒன்றாக வந்தவர்கள் இப்போது பிரிந்து மூன்றாக வந்துள்ளீர்கள் - என்று கூறினார்.

இதன் பின்னர், தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் த. சித்தார்த்தனும் 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன், மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்துவதற்கும் இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரினர். அத்துடன், எமது கட்சி சமஷ்டி தீர்வையே கொள்கையாக கொண்டிருந்தாலும் 13இன் நடைமுறையாக்கத்தை கோருவதாகவும் சுமந்திரன் இதன்போது குறிப்பிட்டார்.

இவர்களுக்கு பதிலளித்த இந்திய பிரதமர், அநுர குமார இந்தியா வந்த போதும் - தற்போதும் இந்த விடயத்தை அவருக்கு தெரியப்படுத்தினேன் என்றும் விரைவில் மாகாண சபை தேர்தலை நடத்துவதாக அவர் உறுதியளித்துள்ளார் எனவும் கூறினார்.

13ஆம் திருத்தத்திலுள்ள குறைபாடுகள் தொடர்பில் புதுடில்லிக்கு வந்து பேச்சு நடத்த விரும்புகிறோம் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் கூறினர். இந்த நிலையில், 13ஆவது திருத்தம் பல வீனமான குறைபாடுகளை கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் புதுடில்லியுடன் பேச விரும்புகிறோம் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார். அத்துடன், அவர் சமஷ்டித் தீர்வே வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதற்கு, "நீங்கள் டில்லிக்கு தாராளமாக வாருங்கள். அங்குள்ள அதிகாரிகளுடன் இதுபற்றி பேசுங்கள். அவர்களின் கவனத்துக்கு வந்தபின்னர் அடுத்த கட்டத்தை ஆராயலாம் - என்று மோடி கூறினார்.

இதேநேரம், வடக்கு, கிழக்கில் சைவர்களின் வழிபாட்டிடங்களில் பௌத்த ஆக்கிரமிப்பு விவகாரத்தையும் 3 பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டினர்.

இதன் பாரதூர தன்மையை தற்போதே உணர்வதாகவும் அரசாங்கத்துடன் உரியவாறு பேச்சு நடத்துவதாகவும் இந்திய பிரதமர் தெரிவித்தார்

இந்திய மீனவர் விவாகரம் குறித்து பேசப்பட்டபோது,

"இது தமிழர்களுக்கிடையிலான பிரச்னை. இதனை இரு நாட்டு தமிழர்களுமே பேசித் தீர்க்க வேண்டும். நீங்கள் ஒரு தரப்பினர் தமிழகம் சென்று அங்குள்ள மீனவர் பிரதிநிதிகளுடன் பேசுங்கள். எப்படி தீர்வு காணலாமென ஒரு வழிமுறையை கண்டுபிடியுங்கள். நாங்கள் அதற்கு உதவுவோம்", என்றார்.

இந்த சந்திப்பில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் சீ. வீ. கே. சிவஞானம், சி. சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் செல்வம் அடைக்கலநாதன், த. சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## சர்வதேச...

இரு நாடுகளும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் கூட்டு இராணுவ மற்றும் கடற்படை பயிற்சிகள் ஆகியவற்றால் இரு தரப்பு உறவுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, இலங்கை முப்படைகளின் சுமார் 750 அதிகாரிகளுக்கு இந்தியா ஆண்டு தோறும் பயிற்சி வழங்குகிறது.

"இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, கட்சிகள் தேசிய மற்றும் இராணுவ சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நோக்கங்களை மதிக்க உறுதியளிக்கின்றன. இதில் மாநிலங்களின் இறையாண்மை சமத்துவம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் மீற முடியாத தன்மை மற்றும் கட்சிகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை ஆகியவை அடங்கும்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் பாதுகாப்பு உறவுகளுக்கான உறுதியான அடித்தளத்தின் மூலம், முப்படை அதிகாரிகளின் பரிமாற்றம், பயிற்சி, படைகளுக்கு இடையே பணியாளர் பேச்சு, தகவல் பரிமாற்றம், பாதுகாப்பு துறையில் ஒத்துழைப்பு, பாதுகாப்பு தொழில்நுட்பம், ஆராய்ச் சித் துறையில் தொடர்புடைய அறிவுசார் சொத்துரிமைகளை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆகியவை தொழில்முறை முறையில் மேற்கொள்ளப்படும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும், மூன்று மாத முன்கூட்டியே அறிவிப்புடன் ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளவும் அதன் பிறகு மூன்று ஆண்டுகளுக்குத் தொடரவும் இரு தரப்பினருக்கும் உரிமைகள் ஒதுக்கப்பட் டுள்ளன. முன்னேற்றம் மற்றும் முடி வுக்கு உட்பட்டு, தேவைப்பட்டால் இதேபோன்ற முன் அறிவிப்புடன் ஒப் பந்தத்தை முடிவுக்கு கொண்டுவர வேண் டும்," என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஏழு ...

தொடர்பில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றப்பட்டன.

இதன்படி, மின்சார இறக்குமதி / ஏற்றுமதிக்கான உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட இடை இணைப்பை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. டி. எம். உதயங்க ஹேமபால மற் றும் இந்திய வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் பரிமாறப் பட்டன.

திருகோணமலையை வலுசக்தி மையமாக மேம்படுத்துவதில் ஒத்துழைப்புக்காக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே. டி. எம். உதயங்க ஹேமபால, இந்திய வெளியுறவு செய லாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இலங்கைக் கான ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் காலித் நசார் அலமேரி ஆகியோர் பரி மாறினர்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். சம்பத் துய்யகொந்த மற்றும் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரால் மாற்றப்பட்டன.

இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சுக்கும் இலங்கை சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கும் இடையிலான சுகாதாரம் மற்றும் மருந்துத் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.


கிழக்கு மாகாணத்தில் பல்துறை நன்கொடை உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் பரிமாறப்பட்டன.

இதேவேளை, டிஜிற்றல் தீர்வுகளைப் பகிர்வது குறித்தும் மருந்து விதிமுறைகள் ஒத்துழைப்புத் தொடர்பிலும் ஒப்பந்தங்கள் எட்டப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## இந்தியாவின் போர் கப்பல் கொழும்பை வந்தடைந்தது



கொழும்பு, ஏப். 06

இந்திய கடற்படையின் போர் கப்பலான ஐ. என். எஸ். சயாத்ரி, மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

143 மீற்றர் நீளமுடைய இந்த கப்பலில் 320 நிர்வாக குழுவினர் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயணம் இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்துவதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கப்பலின் நிர்வாக குழுவினர் நாட்டின் சுற்றுலா தலங்களைப் பார்வையிடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தபால் மூல வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் நிறைவு!

கொழும்பு, ஏப். 06

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என்று அரச அச்சக பணிப்பாளர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்தார்.

இந்த முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக சுமார் 7 இலட்சம் தபால் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன. அச்சிடப்பட்ட தபால் மூல வாக்குச் சீட்டுகளை எதிர்வரும் 7ஆம் திகதி விநியோகிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த நாட்களில் வாக்களிக்க முடியாதவர்கள் எதிர்வரும் 28, 29 ஆகிய தினங்களில் வாக்களிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்க வரி விதிப்பிலிருந்து மீள்வதற்கு அரசுக்கு ஆதரவு!

### சிறீலங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, ஏப். 06

அமெரிக்காவின் வரிவிதிப்பால் ஏற்படப்போகும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்குரிய அனைத்து வேலைத் திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் பக்கமே நிற்பதாகவும், குறுகிய அரசியல் நோக்கில் செயல்பட தயாரில்லை எனவும் அவர் கூறினார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்க 44 சதவீத வரியை விதித்துள்ளது. இதனால் பெரும் பொருளாதார பிரச்னையின் நுழைவாயிலில் நாம் இருக்கிறோம்.

கொரோனா நெருக்கடியின்போதும் இப்படியான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அவ்வேளையில் ஜே.வி.பி. உள்ளிட்ட எதிரணிகள், நாட்டை மூடுமாறு வலியுறுத்தின. தொழிற்சாலைகளை மூடுமாறு கூறின.

அதாவது நெருக்கடியில் இருந்து நாடு மீண்டெழ உதவுவதற்கு பதிலாக, நாட்டை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் செயல்பட்டு, நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கின. எனினும், நாம் அவ்வாறு செயல்படபோவதில்லை - என்றார். (ஐ)

### பயங்கரவாத சட்டத்தில் இளைஞன் தடுப்பு

# ஜனாதிபதி உத்தரவு ஆவணத்தை பார்வையிட்டது மன்னிப்பு சபை

கொழும்பு, ஏப். 06

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கொழும்பு இளைஞன் முகமட் ருஸ்டியை 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைப்பதற்கு உத்தரவிட்டுள்ள ஆவணத்தை பார்வையிட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது**

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கொழும்பில் 22 வயது முகமது ருஸ்டி கடந்த மார்ச் 25ஆம் திகதி கைதுசெய்யப்பட்டமை குறித்து சர்வதேச மன்னிப்பு சபை ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி ருஸ்டியை 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைப்பதற்கு உத்தரவிட்டுள்ள ஆவணத்தை சர்வதேச மன்னிப்புச் சபை பார்வையிட்டுள்ளது.

இலங்கையின் புதிய தலைமை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கப்போவதாக அதன் அரசாங்கம் வாக்குறுயளித்துள்ளபோதிலும், அதிகாரிகள் அதனை தொடர்ச்சியாக பயன்படுத்துவது குறித்து நாங்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளோம்.

ருஸ்டியை தடுத்து வைப்பதற்கான உத்தரவில், அவர் தீவிரவாத சித்தாந்தங்களால் தூண்டப்பட்டு, சமூகங்களுக்கு இடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் செயல்படுவது மற்றும் படையினரிடம் அத்தகைய தகவல்களை தெரிந்தே மறைப்பது குறித்து சந்தேகம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருஸ்டி கைதுசெய்யப்பட்டு இரண்டு வாரங்களான பின்னரும், அவரை கைதுசெய்தமை அல்லது தொடர்ந்து தடுத்து வைத்துள்ளமை ஆகியவற்றை நியாயப்படுத்தக்கூடிய குற்றவியல் செயல்பாடுகள் எவற்றுக்குமான ஆதாரங்களை வெளியிடக்கூடிய நிலையில் இலங்கை அதிகாரிகள் இல்லை.

இலங்கை அதிகாரிகள் உடனடியாக ருஸ்டிக்கு நியாயமான நடைமுறைகளை உறுதி செய்யவேண்டும். அவர் தனது குடும்பத்தவர்கள் சட்டத்தரணிகளை சந்திப்பதற்கு தடையற்ற அனுமதியை வழங்க வேண்டும்.

மேலும் அவர் சர்வதேச அளவில் குற்றம் என கருதக்கூடிய எவற்றிலாவது ஈடுபட்டார் என்பதற்கான நம்பகதன்மைமிக்க ஆதாரங்களின் அடிப்படையிலான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டும் இல்லாவிட்டால் அவரை விடுதலை செய்யவேண்டும். (ஐ)

# அமெரிக்காவின் வரியால் ஏற்பட்ட தாக்கங்கள் மதிப்பிடப்படுகின்றன!

### சர்வதேச நாணய நிதியம்

நியூயோர்க், ஏப். 06

அமெரிக்க அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட வரி அதிகரிப்பால் ஏற்படக்கூடிய மிகப்பெரிய பொருளாதார தாக்கங்கள் குறித்து மதிப்பிட்டு வருவதாக சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீயேவா தெரிவித்துள்ளார். அறிக்கையொன்றின் மூலம் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசாங்கம் சமீபத்தில் இலங்கை உட்பட பல நாடுகள்மீது பரஸ்பர வரிகளை விதித்த நிலையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

மந்தமான அபிவிருத்தியின் போது அமெரிக்க வரி அதிகரிப்பானது உலகளாவிய பொருளாதார கண்ணோட்டத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க ஆபத்தை தெளிவாகக் குறிக்கின்றது. உலக பொருளாதாரத்துக்கு மேலும் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளைத் தவிர்ப்பது முக்கியம். வர்த்தக பதற்றங்களைத் தீர்க்கவும் நிச்சயமற்ற தன்மையைக் குறைக்கவும் ஆக்கப்பூர்வமாக செயல்பட அமெரிக்காவையும் அதன் வர்த்தக பங்காளர்களையும் நாம் கேட்டுக்கொள்கிறோம் - என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியம் - உலக வங்கி வசந்த காலக் கூட்டங்களின்போது வெளியிடப்படும் உலக பொருளாதாரக் கண்ணோட்டத்தில் நாணய நிதியம் தனது மதிப்பீட்டின் முடிவுகளை பகிர்ந்து கொள்ளும்.

மேலும், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் திருத்தப்பட்ட வர்த்தக கொள்கையின் கீழ் அமெரிக்காவால் இலங்கைப் பொருட்களுக்கு 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக இலங்கையின் மிக முக்கியமான ஏற்றுமதி சந்தையாக அமெரிக்கா காணப்படுகிறது. கடந்த ஆண்டு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சுமார் 300 கோடி டொலர்களில், 70 சதவீதத்துக்கும் அதிகமானவை ஆடைத் துறை சார்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்காவின் புதிய வரி

# பரிந்துரை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவினரை சந்தித்தார் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப். 06

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவிற்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் இடையே நேற்று சனிக்கிழமை ஜனாதிபதி பணிமனையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்த வரி விதிப்பின்போது நாடென்ற ரீதியில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்த விடயத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியமான நிவாரணங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் விரைவில் அமெரிக்க அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த /ஹலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வர்த்தக அமைச்சின் செயலாளர் ஏ. விமலேந்திராஜா, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, வெளிவிவகார அமைச்சின்



பொருளாதார அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் தர்ஷன பெரேரா, இலங்கை வணிகச் சபையின் தலைமை பொருளாதார கொள்கை ஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, பிராண்டிக்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமர், மாஸ் ஹோல்டிங்ஸ் இணை நிறுவனர் ஷெராட் அமலீன், ஹேலிஸ் குழுமத் தலைவர் மோகன் பண்டிதகே மற்றும் ஆனந்த கல்தேரா ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

மேலும், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org